தேவன் எதுவென்று இயம்புவது இயலாது. இவனது அன்பார்ந்த சுபாவமும் இவனது இளகியதயையும் இரக்கமும் நிறைந்த இருதயமும் கொண்டு பார்க்கையில் புவனமெலாம் பரவிப் பிரகாசிப்பதான பிரேமை யென்னும் தேவதையே இவனது தியானத்துக்குரிய கடவுளாக இவனது அந்தக்கரணத்தில் கோயில் கொண்டிருக்க வேண்டும். புத்த பதவி பிராப்தி யடைந்த பிறகு தியான மெனும் பாவனையுள் நட்பு, தயை, ஆனந்தம், உபேக்ஷை என்பதாக நான்கு பாகுபாடு இவன் செய்துள்ளான். இதனைச் சாதிப்பவர் களுக்குச் சாதகமாக பின்வரும் வர்ணனைக வனிக்கத்தக்கது. இவர்கள், ஏகாந்தத்தில் பிரீதியுள்ளவர்களாக வீற்றிருத்தல் வேண்டும், சரீரத்தைச் சம நிறையில் வைத்தல் வேண்டும், நினைவு தவறாது நடத்தல் வேண்டும். நேசத்தகையில் நெஞ்சை நிறைத்து அதனை ஒருபுறம் நிறுத்தல் வேண்டும், பின்பு இந் நேசத்தகையை நான்கு திசையிலும், உலக மனைத்திலும் பரவச் செய்யவேண்டும். இதன் பிறகு முறையில் தயை, களிப்பு, தியாகம் இவ்விருத்தியில் நிலைத்த மனதையே ஒருவன் சார்ந்திருத்தலும் வேண்டும், அன்றியும் மித்திர பாவத்தால் பார்முழுவதும் கைப்பற்றி அதனைக்கொண்டே தழுவவும் வேண்டும். பௌத்த கிரந்தங்களில் இந்த சாதனைக்குப் பிர்மவிகாரென்று பெயரிடப்பட்டிருக்கிறது.

பிராணயாம முதலான தியானத்தின் கூறுபாடுகள் பகவான் புத்தனுக்கு, இவைகளை முற்றுணர்ந்த பண்டையர்கள் வாயிலாகத் தெரிந்திருத்தலும் கூடும். எனினும் மேற்கூறிய சாதனை முறைகள் இவன்தானே நிர்மாணித்துள்ளான்.

விளையாட்டும், வைராக்கியமும் ;—

இத்தகையில் முற்கூறிய அவதார செயல்களின் மூலகாரணமான கற்பனைக் குரிய பிரியம், தியானம் என்பவைகளின் வித்துகள் பகவான் புத்தனின் மனத் தகத்தே சிறு பிராயத்திலேயே முளை கொண்டிருந்தன. கௌதமரின் காலத்தில் முழு மூடர்களான குலக்கூட்டங்கள் பல விதமான உபயோகங்களிலும், விஷயாதி சுகங்களிலும் நேரம் போக்கி வந்தனர். ஒவ்வொரு பருவகாலத் திற்கும் தக்கபடி எந்தெந்தப் பருவத்தில் எந்தெந்த சுகம் அனுபவிக் கத் தகுமோ அதற் குவந்த சாதனங்கள் நிறைந்த மாளிகைகள் வசிக்கும் பொருட்டு நிர்மாணிக்கப் பட்டிருந்தன. இதே மாதிரி கௌதமனின் தந்தை கட்டியிருந்த மாளிகைகள் குறைந்த தல்ல வாயினும், சுகவுபயோகங்களின் சாதனங்களைக் காண்பதால் மாத் திரம் மயங்கி மோசம்போகக் கூடிய மூர்க்கனல்ல இந்த கௌதமன்.

“ பிக்ஷுக்களே ! நான் அத்தியந்த சுக குமாரனாய் இருந் தேன். எனது சந்தோஷத்தின் பொருட்டு எனது தகப்பனார் பற்பல இடங்களில் சிறிய குளங்கள் கட்டி அதனுள் பலவித

மான தாமரைக் கொடிகளும் பரவச் செய்தார். வெளியே கிளம் பினவுடன், வெயிலால் வருந்தக் கூடா தென்று வேலைக்காரர்களை எனது தலைமீது குடை பிடிக்கும்படிக்கும், சாமரங்களால் வீசும் படிக்கும் நியமித்தார். எனது வஸ்திரங்கள், பள பளப்பான நல்ல பட்டால் தயார் செய்யப்பட்டிருந்தன. பனி, வெயில், மழை காலங்களில் நான் வசிப்பதற்காக வென்று மூன்று தனித் தனி யான அரண்மனைகள் எனக்காக வென்று கட்டி வைக்கப்பட்டிருந் தன. மழைக் காலத்து நான்கு மாதங்களில் நான் கொஞ்சமும் வெளிக் கிளம்பா வண்ணம், இளம் பருவத்து சுந்தர ஸ்திரீகளின் ஆடல் பாடல்களைக் கொண்டு களிக்கத் தக்கவாறு உபபோகங்களின் நிகழ்ச்சியும் ஏற்பட்டு வந்தது. இதர ராஜாக்களின் பணிவிடைக் காரர்களுக்குத் தாழ்ந்த தரமான உணவு கொடுக்கப்பட்டு வந்தும், எங்கள் அரண்மனையுள் மாம்சத்தோடு கூடிய பிரஷ்டான்னம் தினப்பிரதி வழங்கப்பட்டு வந்தது'' என்னும் இவன் மொழிந்த சொற்களே எடுத்துக் கூறப்பட்டிருக்கின்றன.

"இந்த ரீதியாக மனோகர விளையாட்டின் விநோதத்தினிடை களிக்கவேண்டிய எனது மனமாகிய கடல்மீது பின் கூறப்படும் கவலையின் திரைகள் கிளம்பி அலை மோதிக்கொண்டு வந்தன. தாங்கள் தாமே வரும் சில காலத்துள் வயோதிகனாகவேண்டு மல்லவா? கிழமையால் நடு நடுங்கிக்கொண்டிருக்கும் மனிதர் களைப் பார்த்து ஏன் அருவருக்கவேண்டும்? மூப்பை யடைவே னென்னும் உணர்ச்சியை நான் அறியப் பெற்றிருந்தும், மற்றைய சாதாரண ஜனங்களைப் போல நான் வெறுக்கப்படுவது என்பால் தகுதி யாகாது. இதைப்போன்ற கவலைத் திரைகள் மதங்கொண்ட உயர்ந்த இளமை யெனும் கரைமீது மோதி என் மன வரம்பைக் கரைத்துவிட்டன''

"தாங்கள் தாமே ஒருக்கால் நோயால் பீடிக்கப்படுவார்கள் என்று இதனை உணரப்பெற்றிருந்தும், ஜனங்கள் நோயாளிகளைப் பார்த்து மூக்கை முறுக்குகிறார்கள். நான் நோயுற்றிருப்பது அசாத் தியமன்று, அப்போது என்பால் பிறர் இங்ஙனம் செய்வது தகுதி யாகாது. இன்னும் இப்படிப்பட்ட மலின எண்ணங்களால் மாசடைந்து, சரீர சம்பத்தின் வளம்பெற்ற எனது பகட்டெல் லாம் மடிந்தது."

"தாங்கள் தாமே ஒருக்கால் இறக்கவும் வேண்டும் என்பதை உணரப்பெற்றிருந்தும் மனிதர்கள் இறந்தவர்களைக் கண்டு அகன்று செல்லுகிறார்கள். நானும் இறக்கக் கூடியவனா யிருப்பதால் சாமா னிய ஜனங்களைப்போல பிணத்தைப் பார்த்து எட்டாக் கடை பதுங்குவது சிறிதும் பாங்கன்று என்னும் எண்ணம் பற்றிய திரையிடை எனது வாழ்க்கைச் சுகமானது சிதைவுற்றது'' என்று

இவன் தனது பாலியாவஸ்தையை விவரித்ததாகக் காணப்படுகிறது.

மேற்கூறிய இவனது மொழிகளை நாம் கவனிக்குமிடத்து வைபவத்தின் அத்தியந்த உன்னதமான சிகரத்தி லிருந்துகொண்டிருக்கும் கௌதமனின் மனத்தில் சர்வ சாதாரண ஜனங்களின் நிலைமையானது பிரதிபிம்பித்துத் தோன்றுவது, இவனது தயையின் பிரதாபத்தைத் துலக்குகின்றது. வருத்தத்திற் குட்பட்ட தாழ்ந்தோர்களின் துக்கத்தைக் குறிக்கும் வெந்துயிர்க்கும் வெவ்வுயிர்ப்பும் இவனது அமைதியில் அமளி செய்யும் ஆற்றலுடையதாயிற்று. பாக்கியவசத்தால் கிடைத்ததான விஷய போகத்தி னிடையில் அகப்பட்டு இவன் அதனுள் ஆழ்ந்துபோக வில்லை. இவனது சுயேச்சையான மனம் விஷய போகங்களாலே பாரமடைந்தனவே யொழியச் சுக மடையவில்லை.

இவனது இந்த இளக்கமுற்ற சுபாவம் கிரமேண அதிகரித்து இவ னுள்ளத்தில் பெரிய வேறுபாட்டை உண்டு பண்ணியது. தேர்ப்பாகனோடு செல்லுகையில் இவ்விருவருக்கும் நிகழ்ந்த சம்பாஷணைக்குக் காரணமாக ரோகி, கிழவன், ப்ரேதம், வழிப்போகும் பிக்ஷு இவர்கள் பார்வையின் முன்னிலையில் வந்ததால், நல்ல வைராக்கிய உறுதிப்பாடு இவனுள் உண்டாயிற்றெனக் காட்டும் கதைகள் லலித விஸ்தார முதலாய கிரந்தங்களில் காணப்படுகின்றன. சில புத்தகங்களில் இவன் இரவில் தனித்து வெளிக் கிளம்பினதாகவும் சாரதியோடு கூட இரதத்தில் வீற்றுச் சென்றதாகவும், அல்லது பிரபு இராமச்சந்திரன் மாதிரி, குதிரை மீது உட்கார்ந்துகொண்டு போனதாகவும், மற்றும் பல வர்ணனைகள் அடங்கி யிருக்கின்றன. வேறு அநேக இடங்களில், கௌதமன் தனது அரண்மனையைத் துறக்குங்கால், இவனுக்கோர் புத்திர ரத்தினம் பிறந்ததென விபரமும் வரைந்துளது. ஆனால் இவைகள் எல்லாமே உண்மையான வர்ணனை யன்று. உண்மையும் சில இருக்கலாம், ஒவ்வொரு எழுத்தும் உண்மை யென்று கூறுவதற் குரிய வாஸ்தவப் போக்கு இவைகளுள் இல்லை. நோய் பற்றிய மனிதன், வயோதிகன், பிரேதம், யாசகன், இவர்களுள் ஒருவரேனும் வயது இருபத்தொன்பதுக் கிடையில், கௌதமன் முன்னிலையில் வரவில்லை என்பது அசம்பாவிதமே யாகும். தேர்ப்பாகன் இவனுக்கு உண்மையில் குரு வுபதேசம் அருளினு னென்பது அநுமானத்திற்குச் சற்று விரோதமாகவே காண்கிறது. மனையைவிட் டகலுங் காலை, இவனுக்கு இராகுலன் என்னுமோர் புதல்வன் இருந்தா னென்னும் விருத்தாந்தம் வாஸ்தவமா யிருப்பினும், அப்புதல்வன் இவன் இல்லறத் தியாகம் செய்த அன்றே ஜனித்தா னென்பதாகக் குறிப்பிட்டுக் கூறுவதற்கு நம்பிக்கையைத் தரக்கூடிய பிரமாணமு மில்லை.

“ பிக்ஷுக்களே ! அடங்க இளமைப் பிராயத்துள் இருக்கையிலே, அன்றியும் எனது சிரசின்மீது ஒரு ரோமமும் நரைபடாதிருக்கையிலேயே இந்த எண்ணங்கள் எனது இருதய சாகரத்துட் கலக்கத்தை உண்டாக்கி என்னையும் வீட்டுக் கப்புறமாக்கிற்று. எனது தந்தையும் தாயும் விடை யளிக்கவில்லை. இவர்கள் அலை மோதி அழுதுகொண்டிருக்கையில் நான் முண்டனம்செய்து காவி வஸ்திரம் தரித்து மனையை விட்ட கன்றேன் ” என்னும் இச்சொற்கள் மத்திய மனிகாயமதில் காணப்படுகின்றன.

வைராக்கியத்தின் காரணம் :—

கௌதமன் எவ்விதம் மனையைவிட் டகன்றான் என்னும் வினவைக் காட்டிலும், உன்மத்த இளமைப் பருவத்து சுக குமாரனாகிய இந்த ராஜ புதல்வன் விஷய போகங்களை அதிக அற்பமாக நினைத்து, எல்லா வித சம்பத்தையும் காலா லுதைத்துத் தள்ளி வைராக்கிய தீபத்தையே கையி லேந்தி, அடைவதற்குக் கஷ்ட சாத்தியமான நிர்வாண சுகத்தைத் தேடுவான் பொருட்டு என் புகுந்தான் என்பதை ஆராய்ந்தறிவது, அதிக மேம்பாடு டையதாகவும் நமது போதனைக் குரியதாகவு மாகும். கௌதமன் காலத்தில் சக்ரவர்த்தி யென்பதாகக் கூறப்பெறுவது, க்ஷத்திரிய குலத்திற்கு மிக வுயர்ந்த பதவியைக் குறிப்பதாம். எதாமொரு அரசனுக்குக் குழந்தை உண்டானவுடன், இது பின் நாளளவில் சார்வ பௌமனெனும் பெயரை வகிக்கக் கூடுமா என்று ஜன்ம பத்திரிகையைக் கொண்டு பரிசோதனை செய்வது துலங்கும். ஆனல் வஸ்துக்களின் யதார்த்தத்தை அறியும் விவேகத்தோடு கூடிய பகவான் புத்த னுள்ளத்தில் சக்கிரவர்த்தித்துவம் சம்பாதிப்பதின் ஆசையானது பெருமையைத் தருவதாகக் காணவில்லை. ஏனெனில் சக்கிரவர்த்தியான போதிலும், பயம், மோகம், கவலை முதலான பகைவர் கூட்டத்தினின்றும் முக்தி யடைவது சக்கிரவர்த்திக்குச் சாத்திய மன்று என்பதைப் பகவான் புத்தன் நன்கு உணரப் பெற்றிருந்தான். இந்தப் பகைவர்களை வென்று அவர்களது கொட்டங்களை யெல்லாம் ஒடுக்கி அதன் பின்னர் பெறுவதாகிய அகண்ட சாந்தி சாம்பிராஜ்ஜியத்தைப் பெறுதலே முதன்மையான பெருமை யென்றும், இப்பேர்க்கொத்த சாம்பிராஜ்ஜியத்தை ஜனங்களுக்குத்தெரிவித்து அவர்களையும் சம்சாரதாபத்தினின்று விடுதலை செய்ய வேண்டுமென்பதே இவனது கவலை. குடும்பத்தைத் தியாகம் செய்து வனம் வனுந்திரத்தில் சஞ்சாரம் செய்யும் கிரமமானது மேற்கூறிய சாம்பிராஜ்ஜிய மார்க்கத்தில் அவர்களையும் கொணர்ந்து சேர்க்குமென்று பகவான் புத்தனுக்குப் பூர்ண நம்பிக்கை யிருந்தது.

“ எனக்கு சாந்தி சுகமானது இல்லாதிருந்ததின் நிமித்தம், மற்றவர்களின் குற்றங்களை எடுத்துரைத்துக் காலத்தை அதிகரிக்கச்

செய்யும் உலகத்தோர்களைப் பார்த்து, எனக்குள் விபரீத பயம தோன்றலாயிற்று. அன்றியும் வைராக்கியம், எங்ஙனம் எனக்கு சித்தித்தது யென்பதை நான் இப்போது தெரிவிக்கின்றேன். நாளளவில் வற்றிப்போவதான தண்ணீர் குளங்களைக் கண்ணுற்று அக் குளங்களிலுள்ள மீன்கள் தமக்குள் சண்டையிட்டு, ஸ்வனசத் தையே அடைவது போன்ற ஜன சமூகங்களைப் பார்த்து மருண் டவனானேன். சகத்திடை அறு வறப்பு என்னுள் அதிகரித்தது. ஸ்வக்ஷயம் செய்து கொள்ளும் ஜனங்கள் மத்தியிலிருந்து கொண்டு தன்னையே இரக்ஷித்துக் கொள்ளும் படிக்குள்ள நிர்ப்பயமான இட மொன்றும் அப்போது எனக்குக் காண்பதாயில்லை. ஏனெனில் திசை களின் முடிவு வரை பார்வையைப் பரப்பிய போதிலும் கலவர முற்ற உலகத்தின் பயங்கர நிலைமையின் சித்திரமே எதிர்ப் படுவதாயிருந் தது. இதனை நோக்கிய எனது நெஞ்சம் நெளிவுற்றது" என்ற னர் பகவான் புத்தன். இந்த வியப்பு மொழியிடை தார்க்கிக திருஷ் டியில் பார்க்கு மிடத்து, நோய், நரை, சாக்காடு முதலியவைகளால் மெலிவுறும் ஜன சமாஜம் நீர் மேற் குமிழிபோன்ற லௌகீக சுக சோகத்தை பின் தொடர்ந்து ஒருவரை யொருவர் கொல்லுவதில் சன்னத்தமாகப் பெருகி வருவதைப் பார்த்து பகவான் புத்தனின் அந்தக் கரணத்தில் பச்சாதாபம் குடிகொண்டிருந்தது என்பது வெளிப்படையான உண்மை. சுயநயம், துவேஷம், அசூயை, மமதை முதலானவைகளே மனிதருள் கலகத்திற்கு வித்தாகி யிருப் பதை உணர்ந்தவனு யிருத்தலோடு வாழ்க்கையின் லௌகீக சுகம் கேவலம் அநித்திய மென்று நன்கு தெரிந்திருந்தான். இதுவே இவனது வைராக்கியத்திற்கு மூலமாகும். வைராக்கிய மென்பது ஆத்ம வுன்னதிக்கு அடிச்சுவடு. பகட்டான விஷய சுகத்தின் மத்தி யிலும் எங்கும் நிகழ்வதான அற்ப நிகழ்ச்சியின் மத்தியிலும் ஒருவ னுக்கு அலக்ஷிய நோக்க நிலைபெறவேண்டுவது மன்றி, இதிலு மதிக மாகப் பரிசுத்த நிலைக்குரிய ஆனந்தத்திடை இலக்கை நாட்டி, அங்கிருக்க முயல வேண்டுவதுமே, அடுத்த அடிச்சுவடு. தோற்கண் களால் பார்க்கப் படுவதான தோற்றத்தைப் பற்றி மயங்கிச் விஷய சுகத்தில் சார்வதில் நித்திய சுகம் சித்திக்காது. அந்தக்கரண மெனும் அகக்கண் பார்ப்பதான நிலை பெற்ற சுகமே சுகம். இந்த சத்திய உணர்ச்சி உறுதியாக மனித னுள்ளத்து தோன்றும் வரை சாந்தி யென்னும் ஆனந்த மயமான க்ஷேத்திரத்தை அடையும் மார்க்கத்தில் அவன் நடப்பவனாக மாட்டான்.

கள்ளாமை

(குன்னத்தூர் L. V. ரமணன் எழுதுகிறார்.)

'உள்ளத்தா லுள்ளலுந் தீதே பிறன்பொருளைக்
கள்ளத்தாற் கள்வே மெனல்.'—திருக்குறள்.

களவு என்னுஞ் சொல் 'திருட்டு, வஞ்சனை' என்று பொருள் படும். இது பஞ்சமா பாதகங்களில் ஒன்றாகும். அன்னியர்க் குரியதான யாதொரு பொருளையும் அவரை வஞ்சித்து அபகரித்துக் கொள்ளுதலே களவு. 'களவு, வஞ்சனை, காமமென் றிவையெலாங் காட்டுமளவு மாயை யிங்காரெனக் கமைத்தனை ரையா' என்ற தாயுமானவர் திருவாக்குக் கொப்ப, களவு மானிடரை மயக்கி அவரை மறத்தி விழுக்கும் மாயையென் றறியப்படும். வீட்டார் அயர்ந்த தூக்கத்தில் ஆழ்ந்திருக்குங் கால் கன்னம் வைத்து அவ் வீட்டினுள் நுழைந்து அகப்படும் பொருள்களை அபகரித்தோடுவது மாத்திரமே களவல்ல; ஒருவர் கொடுத்துவைத்த பொருளைத் தானே அபகரித்துக் கொள்வதுங் களவே; செல்லாததும் உண்மை யில்லாததுமான போலி நாணயங்களை வழங்குவதுங் களவே; பிறனொருவன் பெயரைக் கையெழுத்திட்டுக் கள்ளப் பத்திரங்களுண்டாக்குவதுங் களவே; தீச்செய்கையோ அல்லது நற்காரியமோ செய்வதற்குப் பிறரிட மிருந்து கையுறை (லஞ்சம்) வாங்கிக் கொள்வதும் களவே; பொய் வேடம் பூண்டு வேறொருவன் பெயரை வைத்துக்கொண்டு அவனே போல் நடித்தலுங் களவே; பிறனொருவன் எழுதியதைத் தான் எழுதியதாக வெளியிடுவதுங் களவே; அன்றியும் ஆசிரியரை வழிபட்டன்றி அவரை வஞ்சித்துக் கல்வி கற்றலுங் களவேயாகும். எனவே, பொருள்பற்றி நிகழுங் குற்றங்களே யன்றிப் பிறரை எவ்வாற்றானும் வஞ்சிப்பதுங் களவே யாகு மென்பது 'வெள்ளிடை மலைபோல்' விளங்க வில்லையா? 'உள்ள முருக வுரைத்துப் பொருள் கொள்வார் கள்ளரோ டொவ்வாரோ தாம்' என்றார் முனைபாடியாரும்.

இஃதிவ்வாறாக 'வறுமையால் வருந்துபவர் வயிறு வளர்ப்பது எங்ஙனம்' என்று வினவுவோருமுளர். 'சேவுக் கஞ்சிப் பாம்பின் வாய்ப் பகுவோர்' போல வறுமைக் கஞ்சிக் களவு செய்யத் துணிதல், மிகப் பெருந் துன்பத்திற்கே யிடமாவ தன்றிப் பிறிதில்லை. தரித்திர காலத்திலும் ஒழுக்கமும் நாணயமுங் கெடாதிருத்தலே மேன்மை. வறுமையிற் செம்மையே நன்மை பயக்கும். களவு கொள்ளக் கருதுங்கால் 'கூடாது' என்று நம்மைக் கடியும் நம் மனச் சாக்ஷியானது நமக்கு 'இம்மையிலேயே நரகானு

பவங் கிடைத்துவிட்டதென்று' எண்ணத் தக்க கொடிய தண்டனையைத் தர வல்லது. 'வேருெருவர் காணு துலகத் துலாவலாம்'; ஆனல் நம் மன மறியாது நாம் நடத்தலுங் கூடுமோ? குற்றமுள்ள நெஞ்சு குறு குறுக்கு மல்லவா? திருடும்போது 'இதை யாராவது கண்டு கொள்வாரோ' என்றும் 'பிடிக்கப்பட்டால் என்ன தண்டனை யடைய நேரிடுமோ' என்றும் அஞ்சி யஞ்சி நெஞ்சம் திடுக்குறுதலினல் சதா சர்வ காலமும் மனத் துயரமே தாங்கள் தேடிய பொருளாகக் கொண்டு கள்வர் கவலையி லாழ்ந்திருப்பர். 'கள்வமென்பார்க்குந் துயி லில்லை' என்ற காகனர் கூற்றும் குறைவு படுமோ? ஆகவே, களவு செய்யக் கருதுதலுந் துன்பம்; களவு கொள்ளுதலுந் துன்பம்; கொள்வதிற் றவறிடிற் றுன்பம்; கொண்டவப் பொருளை உபயோகித்தலிற் றுன்பம்; முன் செய்த களவை யெண்ணுங்காற் றுன்பம்; இங்ஙனம் பல துன்பங்களும் பயத்தலாற் களவைக் கணமேனுங் கருதுதல் கூடாது. இதையே 'கள்ளாமை வேண்டுங் கடிய வருதலால்' என நான் மணிக்கடிகையில் நயந்து கூறினர் போலும்.

மேலும், ஒரு தடவை திருடிய வரென்று குறிப்பிடப் பட்டவர் பின்பு களவினை அறவே ஒழித்து விடினும், அவர் சென்ற சென்ற இடங்களி லெல்லாம், பிறராற் செய்யப்பட்ட களவும் அவராற் செய்யப்பட்டதாகவே கருதப்படும். * 'திருடருக் குறவில்லை' என்பதற் கொப்ப, அவரைச் சொந்தக்காரரும் சத்துருக்களும், சிறியாரும் பெரியோரும், ஆண் பெண் பேதமின்றி எல்லோரும் நம்பாது மரியாதை யின்றி இழிவு படுத்தி யிகழ்வர். 'பல நாள் திருடன் ஒரு நாள் அகப்படுவான்' என்னும் பழமொழிக்கு நேராகக் கடைசியில் எவ்வாருக வாவது அகப்பட்டுக்கொண்டு, எல்லாரிடமும் அடியும் உதையும் வாங்கிக்கொண்டதே யன்றி, அரசனலுந் தண்டிக்கப்பட்டு, சிறைவாசஞ் செய்து, 'மான மழிந்து மதிகெட்டுப் போனதிசை யெல்லார்க்கும் பொல்லனு யேழ்பிறப்புந் தீயனய்'த் தன் ஆயுட் காலத்தைக் கூருணக் கஷ்டத்துடன் கடத்த வேண்டி வரும். ஆகையால், 'கள்ளத்தைச் செய்யும் வினையால் வருந்தக் கணக்கு முண்டோ' என்றதை யெண்ணி, 'களவெனுங் காரறி வாண்மையை' நீக்குதல் வேண்டும். † பொன்னுபரணத்திலும் புகழாபரணம் மேலல்லவா? இதை நோக்கியே 'களவும் கத்தும் அற' என்று ஆன்றோர் உபதேசிக்கின்றனர்.

---

* திருடினற் பொன் கிடைப்பதைப் பார்க்கிலும் அஃதின்றி உத்தமனென்ற புகழ் நிலைத்தலையே மேன்மையாகக் கொள்வார்.

† திருடனும் உறவு கருதான்; திருட னுறவைப் பிறருங் கருதார்.

தவிர, தீச் செயல்களால் தேடப்பட்டவை தீமையையே யன்றி, நன்மையை ஒருபோதும் நல்கா. 'விதை யொன்று விதைக்கச் சுரை யொன்று முளைக்குமா?' களவினாற் கொண்ட செல்வம் நன்மை பயக்கத் தக்கதாய்க் காணப்படினும் உண்மையான நன்மையைக் கொடுக்கக்கூடிய சக்தி அதற்குக் கிடையவே கிடையாது. காட்டுப் பசு உடம்பை நக்கும்போது சுகமாய் இருந்து பின்பு அதே மரணத்திற்குக் காரணமாதல் போல, பாவச் செயல்களாற் சம்பாதிக்கப்பட்ட செல்வம் தற்காலம் விருத்தி யடைந்து ஏதோ கொஞ்ச நன்மை யளிப்பதுபோலத் தோன்றினும், தான் போகும்போது பழியையும் பாவத்தையுமே பின் நிறுத்திவிட்டு, முன்னுள்ள பொருளையும் புண்ணியத்தையும் உடன் கொண்டு போய்த் தன் னளவுக்கு மீறிக் கெடுவது மன்றி நரக முதலிய தீமையையுந் தரும் 'களவினா லாகிய ஆக்கம் அளவிறந்—தாவது போலக் கெடும்.' என்ற அருமைத் திருவாக்கு ஈண்டு ஆராயற் பாலது. களவினாற் கூட்டப்பட்ட செல்வம் விரயமாயே தீரும்; ஏனெனில், மனிதனை எந்தக் கெட்ட குணங்கள் கெட்டவழிகளாற் சம்பாதிக்கத் தூண்டுகின்றனவோ, அதே தீக்குணங்கள் அவனை அம்மாதிரியான தீய வழிகளிலேயே செலவு செய்யத் தூண்டுகின்றன என்பது உலக மறிந்த விஷயம். ஆதலின், தீயவை ஒருபோதும் நல்லவை யாக மாட்டா; எனின், தீச் செயல்களால் தேடப்பட்டவை தீமையைத் தருவனவே யன்றி, வேறு நன்மையை விளைப்பனவாவது எவ்வாறு கூடும்?

துயரத்திற்கு மூல காரணம் தீச் செயலே. 'கெடுவான் கேடு நினைப்பான்' என்ற படி தீய நினைவுகளை நினைத்தலும், செய்தலே போலத் துயர் தரும். அயலார் ஆஸ்தியை அவ ரறியாது அபகரித்துக் கோடற் கண்ணே கொள்ளும் அவா அறியாமையினாலே அப்பொழுது இனிதுபோலத் தோன்றும்; ஆயினும் அது பயன் கொடுக்கும்போது தீராத துன்பத்தையே தரும். ஒருவர் செய்த களவின் பயன் பல நாள் மட்டும் மறைவதே யில்லை; அக்கிரமமாய்க் கொல்லப்பட்டவனது ஆவேசம் கொலைக்காரனுடைய மனதில் எப்போதும் தோன்றிப் பயமுறுத்திக்கொண் டிருப்பது போல, கள்வன் மனத்தையும் 'தன் திருடு கண்டுபிடிக்கப்பட்டு விடுமோ?' என்ற திகில், விடாது பற்றிக்கொண்டிருக்கும். அற நெறிச் செல்வார் நெஞ்சத்துத் தருமம் நிலை பெறுதல் போலக் களவினைக் கருதுவோர் கருத்தில் கரவே குடிகொண்டிருக்கும். 'வஞ்சனையும் பொய்யு முள்ளே வைத்தழுக்காறு யுளனு—நெஞ்சனுக்கு முண்டோ நெறிதான் பராபரமே' என்று தாயுமான சுவாமிகளும் திருவாய் மலர்ந்தருளி யிருக்கின்றா ரல்லவா? 'களவுந் துறவும் இருளு மொளியும் போலத் தம்முள் மாறுகலின், ஒருங்கு நில்லா. களவுசெய்ய விருப்புடையார் தம் தீச்செயல்களைத் துறந்து

விட்டு, நல்லனவற்றின் வழிவந்து நில்லார். இத்தகையோர், யானை தன் தலையிலேயே மண்ணைப் போட்டுக்கொள்வதைப் போலத் தங்கள் தீய நடத்தையால் தாங்களே தீங்கு தேடிக்கொள்கின்றனர். ஆதலால், பிற னொருவன் பொருளை வஞ்சித்துக்கொள்ளக் கருது வதும் பாவம்; கருதியவாறே வஞ்சனையால் அதைக் கொள்ளுத லும் பாவம்; கொண்ட அப் பொருளை அனுபவித்தலும் பாவம்; இப்படியாகப் பெரும் பாவத்துக்குக் காரணமான தீக் களவை விரும்பியவர், அதை நினைத்த பொழுதே கெடுவர். இங்கு 'கள வின் கட் கன்றிய காதல் விளைவின்கண்—வீயா விழுமந் தரும்' என்ற உறுதியுரை உய்த்துணரற் பாலது.

பாருங்கள்! இது வரையிலே கூறியவற்றைக் கொண்டு, 'கள வென்னுங் கொடுங் குற்றம் இளமையிற் றானே கடியப்படல் வேண்டு மென்பது சொல்லாமலே புலப்படுகின்ற தல்லவா? இவ் வஞ்ச வழக்கம், கண்டவுடனே தண்டிக்கப்படா தொழிந்தால், மேன்மேலும் வளர்ந்து கொண்டே போய்க் கடைசியில் பெருந் துயர்க் கடலி லாழ்த்திவிடும். எனவே, 'சிறுவர்களிடத்தில் களவு செய்யுங் குணம் எள்ளளவுங் காணப்படின், அவர்களை உடனே தண்டித்துத் திருத்துதல் வேண்டும். அவ்வாறு செய் தலே தாய் தந்தையர்களின் கடமையாகும்; இதைக் கவனியாது அலக்ஷியமாக இருந்து விடில் அவர்களுக்குப் பின்னால் நேரிடக் கூடிய பெருந் துன்பத்துக்குத் தாய் தந்தையர்களே காரணமாவார் கள்.'

இனி, ஒரு குற்றத்தை மறைக்க வேறொரு குற்றத்தைச் செய்வது நன்மை பயக்குமா? அதே அக் குற்றத்தைக் கண்டு பிடிக்கக் கருவியா யேற்படலா மல்லவா? அழுகிப்போன பிணத் தைப் பெட்டியில் பதனம் செய்து வைத்தாலும் அதன் இயற்கை யான துர்க்கந்தம் வெளிவந்து எவ்வளவு தூரத்திலுள்ளவர் முகத் திலுந் தாக்குவது போல, எவ்வளவு தான் ரகசியமாய் ஒரு காரி யத்தைச் செய்திடினும், எங்கு முள்ள தெய்வம் அங்கு மிருந்து அதனைப் பார்த்துக் கொண்டிருப்ப தன்றி உலகத்தாருக்கும் வெளிப்படுத்தி விடும். இதை நோக்கியே,

"வஞ்சித் தொழுகு மதி யிலிகாள் யாவரையும்
வஞ்சித் தோமென்று மகிழன்மின்—வஞ்சித்த
எங்கு முளனொருவன் காணுங்கொ லென்றஞ்சி
அங்கங் குலைவ தறிவு."

என்று குமரகுருபர சுவாமிகள் கூறியபடி நாம் செய்யுந் தீச்செயல் களை ஒருவருங் காணவிடினும் எங்குமுள்ள கடவுள் காண்பார் என்று அஞ்சிக் கெட்ட செயல்களை விட்டுவிட்டு சன்மார்க்கத்தைச் சார்ந் துய்வதே அறிவுடைமைக் கழகாம். எனவே, 'பிறன் கைப்

பொருள் வவ்வான் வாழ்த லினிது' என்ற படி, தரும நெறியிற் போங்கால் அது உலகத்திற் பொருளா லுயர் பதவியைப் பயப்பது அரிதாயினும், சாந்தமான வாழ்க்கையாலும உண்மையான சந்தோஷத்தாலும் உயர்ந்த பதவியையே எப்போதுங் கொடுக்கும்.

பின்னும், வேண்டு மென்றே தன் சிநேகனை வஞ்சிப்பவன் கடவுளையும் வஞ்சிக்க முடியுமா? கடவுளை வஞ்சிக்க முயன்றால் வீடடையும் மார்க்கத்தை விட்டு விலகிய வனாகிறான். அவனையும் கடவுள் தண்டியாது விடுவாரோ? ஆகையால், 'களவதா மித் தொழிற் கியைந்தோர், மன்ன ராக்கினை வசை நர கடைந்து வாடுவரால்' என்ற நீதி நூல் நெறியின்படியே, களவு கொள்ளக் கருதியவரும், கொண்டவரும், களவுக்கு உளவு சொன்னவரும், இடங் கொடுத்தவரும், இம்மையில் தொடங்கிய காரியம் முடியப் பெறாது இடையே அரசனால் ஒதுக்கப்பட்டும் எல்லோராலும் இகழப்பட்டும், முடிவில் தானே வருந்தியும், படாத பாடெல்லாம் பட்டு, மறுமையில் நரகத் துன்பத்திற் காளாவர். ஆகவே, வீட்டினை யிகழாது விரும்புவோன்,

"கொலை களவு கட்காமங் கோபம் விட்டாலன்றோ
மலை யிலக்காய் நின்னருள்தான் வாய்க்கும் பராபரமே."

என்னுந் தாயுமான சுவாமிகளின் உண்மை யுரையை உய்த்துணர்ந்து, யாதொரு பொருளையும் பிறரை வஞ்சித்துக்கொள்ளக் கருதாவண்ணம் தன்னெஞ்சினைக் காக்க வேண்டியது அத்தியாவசிய மாகும்.

புகையிலை.

(திரு. சுந்தரம் எழுதுகிறார்.)

புகையிலை யானது 1615-ம் ஆண்டிலே ஸர் தாமஸ் ரோ என்ற ஆங்கிலேயரால் மொகலாயச் சக்ரவர்த்தியான ஜெகாங்கீரின் சபைக்கு முதல் முதலில் கொண்டுவரப்பட்டது. இம்மஹானின் பெயர் அழியாம லிருக்குமாறு அது 320 வருடத்திற்குள் காட்டுத் தீப்போல் பாரத தேசத்தில்—புண்ணிய பூமியில் குமரி முதல் ஹிமய பர்வதம் வரை எங்கும் பரவி விட்டது. இது பரவின வேகந்தா னென்னே! காற்றைப்போல் பரவி, இந்தியர்களின் ஆயுளையும், ஊக்கத்தையும், ரத்தத்தையும் கூற்றைப்போல் உறிஞ்சி ஆண்மை யில்லாப் பேடிகளைப்போல் ஆட்டுவிக்கிறது.

ஐயோ! பட்டணங்களில் பகலிலும் கொள்ளிவாய்ப் பிசாசு ஞாபகம் வந்து விடுகிறது. நாட்டுப் புறத்திலும் இது புகுந்துவிட்டது. ஆங்கிலம் பயிலும் மாணவர்கள் 100-க்கு 90 பேர் ஜோப்பில் ஸிகரெட் பெட்டியும் நெருப்புப் பெட்டியும் இல்லாமலிரார். இது தான் நாகரீகம்—தற்கால அநாகரீகம். சில தினங்களுக்கு முன் ஒரு மாணவரை, அவர் புகைத்துக் கொண்டிருக்கும் சமயம் தற்செயலாய்ப் பார்த்தேன். அவரிடம் ஏனோ இவ்வளவு சிரேஷ்டமான வேலையைச் செய்கிறீ ரென்றேன். அவர், சென்னையில் புகைக்காவிட்டால் கட்டாயம் கான்ஸ்டிபேஷன் வந்துவிடும்; எஸ். நோ என்று பாதி ஆங்கிலமும் பாதி தமிழுமாகப் பதில் சொன்னார். முடிவில் அவர் சொன்னதாவது: புகைக்காவிட்டால் மல பந்தம் ஏற்படுகிறதாம்! என்ன விந்தை? வாலிபர்களுக்கு மல பந்தமாம். இயற்கையில் ஏற்பட்ட பரந்த கடல் சென்னைக் குள்ளது ஓர் அதிர்ஷ்டமே. இங்கிருந்தும் இந்த மலபந்தக்காரர்கள் ஏனோ கடற்கரை ஓரமாய், இரண்டு மூன்று மைல் நடக்கக் கூடாது? இது காறும் வயிற்றுக் கில்லாமல் வருந்துகிறவர்களின் தொகை நாட்டில் அதிகமா யிருக்கு மென்று நினைந்திருந்தேன். ஆனால், இப்பொழுது "புகையிலை" யால் பசியாதவர்களும் ஏராளமாய் உண்டென்பதைத் தெரிந்து கொண்டேன்.

புகையிலையைப் பல விதமாய் உபயோகிக்கிறார்கள். மூக்குப் பொடியாம். சிரங்கில் ஐடோபாரம் தூவுகிறதைப்போல் பரிசுத்த காற்றை வாங்கு மிடமான மூக்கில் அடிக்கடி காரமான பொடியை உறிஞ்சுகிறார்கள். இவர்களுக்கு ஜலதோஷத்தைப்போல் 'சளி' சதா வந்துகொண் டிருக்கும். அதை எங்கும் துடைத்து விடுவார்கள். சாதாரண மனிதர்களுக்கு ஒரு கைக்குட்டை யிருக்கும். இவர்களுக்கு ஒவ்வொரு ஜேபியிலும், ஒரு கைக்குட்டை யிருக்கும். ஒரு நாள் பொடி அகப்படாவிட்டால் இவர்கள் படும் பாடு தான் என்ன? சில வருடங்களுக்கு முன் காவேரியாற்றில் உண்டான ஜலப்பிரளயத்தில் ஒருவன் தன் உயிரைக்கூட மதியாமல் ஒரு "சிட்டிகை" பொடிக்காக ஆற்றை நீந்திப் போனானும். யாரைப் பார்த்தாலும் பொடியர்களுக்குள் ஒன்று உண்டு அதை நான் மெச்சுகிறேன். அதாவது பொடியர்களுக்குள் வித்தியாச மின்மை, சமத்துவம், சகோதரத்துவம், இந்த மூன்று முண்டு. தாராளமாய்க் கையை நீட்டிப் பொடி மட்டையை வாங்கி ஒரு சிட்டி எடுத்துக் கொள்ளுவார்கள். இக்கொடிய வழக்கம் தென்னாட்டில் பரவியதைப்போல், இந்தியாவில் மற்றெந்த பாகத்திலும் அவ்வளவு இல்லை. ஆனால், வங்காளத்தில் தற்சமயம், அதி உக்கிரமாய்ப் பரவி வருகிறது. மதராஸ் பொடி—மதராஸ் பொடி என்று உயிரை விட ஆரம்பித்திருக்கிறார்கள். ஏதோ வாசனைப்

பொடியாம், அதை வாலிப மாணவர்கள் விளையாட்டாகப் போட்டு, இறுதியில் பெரிய பொடியர்களாய் விடுகிறார்கள்.

தாம்பூலத்துடன், புகையிலை போடுவது இப்பொழுது வெகு சகஜமாய்ப் போய்விட்டது. இதற்குப் "புகையிலை தின்பவர்" பாஷையில் நாலாம் நம்பராம். இந்தியர்களைப் புதிதாய்ப் பார்க்கும் அயல் நாட்டான் இவர்கள் புகையிலை ஒதுக்கி யிருக்கும் அழகைப் பார்த்தால் இந்தியாவில் கன்னத்தில் வீங்கியிருக்கும் வியாதி ஒன்று இருக்கிறதோ என்று வியப்படைவான்.

மலையாளத்தில் இதற்காக ஸ்பெஷல் துணிப்பை, ஓலைப் பெட்டி முதலியவைகள் எப்பொழுதும் சித்தமா யிருக்கும். யாழ்ப்பாணம் புகையிலை மலையாள நாட்டுக் குள்ளே நுழையக் கூடாதென்று அதிக வரி ஏற்படுத்தி யிருக்கிறார்கள். இந்தியாவிலிருந்து போகிறதற்கும் வரியுண்டு. அப்படி யிருந்தும் புகையிலை உபயோகிப்பது உத்திருஷ்ட நிலையில்தா னிருக்கிறது. சிலர் அறுபது நாழிகையும் வெற்றிலையும், புகையிலையு மாகவே யிருக்கிறார்கள்.

இந்த இலைக்கு வாசனைத் திரவியமாம், அத்தராம், இதெல்லாம் விட்டுப் பாடம் செய்து, உபயோகிக்கிறார்கள். கருப்புக் கட்டியைப் போட்டுப் பாடம் செய்த புகையிலை ஒன்றுண்டு. இதில் எண்ணெயை விடக் கருப்பா யிருக்கும். இதை வாயில் போட்டுக் கொள்கிறார்கள். சிலர், ஓர் இலையை எடுத்து அப்படியே சுருட்டிப் பல்லினிடையில் வைத்துக்கொள்கிறார்கள். இன்னும் எத்தனையோ விதத்தில் இத் தழையை உபயோகிக்கிறார்கள்.

புகைச் சுருட்டுக்காகச் சாதாரணத் தொழிலாளிகூட நகரங்களில் மாதம் இரண்டு மூன்று ரூபாய் செலவிடுகிறான். மத்திய வகுப்பார் முப்பது நாற்பது செலவிடுகிறார்கள். பெரிய உத்யோகஸ்தர்கள் இருநூறு முன்னூறு செலவிடுகிறார்கள். இதை நல் வழியில் செலவிட்டால் எவ்வளவு நலமா யிருக்கும்?

புகை குடிக்கிறவர்கள் தங்களுக்கும் பிறருக்கும் தீமை விளைக்கிறார்கள். குடிக்கும் புகையின் விஷக்காற்று நகரங்களில் சுகாதாரத்தைக் கெடுத்து வருகிறது. அதனால் பல வகை நோய்களும் உண்டாகின்றன.

தானியம் விளையக்கூடிய சொர்ண பூமியில் ஏராளமாகப் புகையிலையைப் பயிரிடுகிறார்கள். மகா யுத்தத்திற்கு முந்திய கணக்குப்படி சுமார் அறுபத்திரண்டு கோடி ரூபாய் மதிப்புள்ள புகையிலையை உற்பத்தி செய்து விற்றிருக்கிறார்கள். இப்பொழுது இன்னும் அதிகமா யிருக்கும். நாட்டிலே சோற்றுப் பஞ்சம் பெருகி வரும் இக்காலத்தில் புகையிலை பயிரிடும் நிலங்களில் தானியங்களைப் பயிரிட்டால் எவ்வளவு நலமா யிருக்கும்?

ஜனங்கள் புகையிலையைப் பல வழிகளில் உபயோகித்துத் தங்களுக்கும் பிறருக்கும் தீமை விளைத்து வருவதைத் தடுக்குமாறும் புகையிலை பயிரிடுவதை விட்டு உணவுப் பொருள்களைப் பயிரிடுமாறும் நாடெங்கும் பெரியதோர் கிளர்ச்சி ஏற்பட வேண்டும்.

எ ண் ண ம்.

மணி. கோட்டீச்சுவர முதலியார் பீ. ஏ.

இந்நில உலகின் கண்ணே கடவுளால் உண்டாக்கப்பட்ட மக்களில் சிலர் இன்பத்தில் திளைத்தும் பலர் துன்பத்தில் களைத்துமிருப்பதைக் காண்கிறோம். மற்றும் சிலர் தங்கள் வாழ்க்கையில் தாங்கள் எடுத்த காரியங்களைச் செவ்வனே செய்து முடித்து அதனால் விளையும் இன்பத்தை அடைந்து தாங்களும் சிறப்புற்று விளங்கி மேல் நிலையை அடைகின்றனர். பலர் தாங்கள் கொண்ட கருத்தை நிலைநாட்ட முடியாமலே தங்கள் வாழ் நாளெல்லாம் துன்பத்திலும் தோல்வியிலும் கழித்து மனமுடைந்து இருக்கின்றனர். இத்தகைய வேற்றுமைகளுக்கு யாது காரணமென்று ஆராய்ச்சி செய்தல் அறிவுடைய மக்களின் கடமை யாகும்.

இதற்குக் கருணை வள்ளலாகிய இறைவனே காரணமா? அல்லது மக்களே காரணமா? கடவுள் எல்லா மக்களுக்கும் அறிவையும் தமது அருளையும் அளித்திருக்கின்றனர். அவர் மக்களிடத்தே எத்தகைய வேற்றுமையும் பாராட்டுகின்றாரில்லை. அவர் காரணமென்று கூறுதல் அறிவுடைய மக்கட் கழகன்று. இதற்குக் காரணம் நம் நாட்டில் வழங்கி வருகின்ற சில பழமொழிகளும் நம் மக்களிடத்தே காணப்படும் குற்றங்களுமே யாகும். "அவன் தலைவிதி" "அந்நாளில் இன்னார்க்கு இன்னபடி என்று எழுதினவன் மூடனா?" என்னும் இத்தகைய மொழிகள் நம் நாட்டில் உலாவி வருகின்றன. இவைகள் மக்களிடத்து இயற்கையாகத் தோன்றும் விருப்பங்களையும் மேல் நிலையை அடையவேண்டுமென்ற நோக்கங்களையும் ஒழித்து விடுகின்றன. அவர்களை ஊக்கமும் முயற்சியும் விட்டு நீங்குகின்றன. ஆகையால் இவர்கள் எந்த வேலையையும் செய்யாது சோம்பித் திரிந்து தங்கள் வாழ்க்கையை வீணாக்குகின்றனர். உலகத்தில் மனிதனுடைய இன்பத்திற்கும் துன்பத்திற்கும் அவனே காரணம்.

லக்ஷமி

"உழைப்பின் வாரா உறுதிகள் உளவோ"

"தெய்வத்தால் ஆகாதெனினும் முயற்சி
மெய்வருத்தக் கூலிதரும்"

என்ற சிறப்புற்ற வாக்குக்களை நாம் படித்திருக்கின்ரும். இத் தகைய வாக்கியங்களைப் படித்தலோடு நில்லாது அநுபவத்திற்குக் கொண்டுவருதல் வேண்டும். விடா முயற்சியும் ஊக்கமும் உடைய ஒருவன் எடுத்த காரியத்தை முடித்து இன்புற்று வாழ்கின்றனன்.

நம் நாட்டில் மக்கள் ஒரே தொழிலில் நிற்பதில்லை. பல் வேறு தொழில்களில் ஈடுபட்டு மனத்தை ஒரு வழிப் படுத்தாது இங்கு மங்கும் அலைந்து திரிந்து எதையும் செய்து முடிப்பதில்லை. ஒருவர் எத் தொழிலில் விருப்பமுடையவராக இருக்கின்ருரோ அத் தொழிலிலேயே அவர் உழன்று வேலை செய்தல் வேண்டும். "தூக்கி வினை செய்" என்ற தமிழ் மூதாட்டியாரின் வாக்கிற் கேற்ப மக்கள் ஒரு தொழிலை எடுத்தபின் அதன் இடையே எத் தகைய இடையூறுகளும் துன்பங்களும் வரினும் அவைகளைப் பொருட் படுத்தாது ஊக்கத்தோடு வேலை செய்வார்க ளாயின் திண்ணமாக வெற்றி அடைவார்கள். 'தாம் எய்த எண்ணிய பொருள்கள் யாவற்றையும் எண்ணிய வாறே செய்து முடிப் பார். எண்ணியவர்கள் அவற்றிற்கு வாயிலாகிய வினைக்கட் டிண்மை யுடையராகப் பெறின்' என்று உரை ஆசிரியராகிய பரி மேலழகர் தெய்வப் புலமைத் திருவள்ளுவ நாயஞர் அருளிச்செய்த

"எண்ணிய எண்ணியாங் கெய்துப எண்ணியார்
திண்ணிய ராகப் பெறின்."

என்ற திருவாக்குக்கு உரை எழுதி யிருக்கின்றனர். தாங்கள் எண்ணியதைச் செய்து முடித்தற்கு வேண்டிய ஊக்கமும், உழைப் பும், மனத் தளர்ச்சியின்மையும் அவர்களிடத்தே குடிகொண்டிருத் தல் வேண்டும். அவர்கள் கொண்ட நோக்கத்தை விட்டு மாறுதல் கூடாது.

இக்காலத்தே நம் நாட்டில் உத்தியோக மின்றி அநேகர் துன் புறுகின்றனர். அவர்கள் இன்று வக்கீல் தொழிலி லிருப்பர். நாளை அதைவிட்டு வேருென்றுக்குச் செல்வார். அதன்பின் உபாத்தியா ராவர். இக்கரை மாட்டிற்கு அக்கரை பச்சை என்பது போல் தாங்கள் ஒரு நிலையிலிருந்து வேலை செய்யாது மாறி மாறி உழன்று வருவதால் எதையும் திருத்தமாகச் செய்யாது துன்ப மடைகின்ற னர். மக்கள் தங்கள் அறிவிற்கும் மன நிலைக்கும், இயற்கைக் குணங்களுக்கும் ஏற்ற ஒரு தொழிலை ஆராய்ந்து தேர்ந்தெடுத்தல்

வேண்டும். எடுத்தபின் அதன் கண் விடாது உழைத்து முடித்தல் வேண்டும்.

உலகத்தில் மிகச் சிறப்புற்று விளங்கிய பெரியோர்க ளெல்லாரும் தங்கள் வாழ்க்கையை இவ்வாறு செய்து சிறப்புற்று விளங்கினர். சிறந்த அறிவாளிகளும், தேசாபிமானத்தில் சிறந்தவர்களும், பாஷாபிமானத்தில் சிறந்தவர்களும் தாங்கள் எடுத்த காரியத்தை நிலைநாட்டுதற்கு எத்தகைய துன்பங்களையும் பாராட்டாது வேலை செய்து தங்கள் கருத்தை நிலைநாட்டினர். மேல் நாட்டில் தோன்றிய ஆப்ரகாம் லிங்கன், முதலியோர்க ளெல்லாம் அவ்வாறே வேலை செய்து தங்கள் நாட்டிற்கு நன்மை புரிந்தனர். நம் நாட்டுச் சிறுவர்கள் இக்காலத்து நம் நாட்டில் காணப்படுகின்ற துன்பங்களையும், ஜாதி வேற்றுமை, மத வேற்றுமை முதலியவைகளால் ஏற்படும் கஷ்டங்களையும் நன்குணர்ந்து இவை யாவும் ஒழிதற்கு வேண்டிய முறையில் உழைப்பதற்கு முன்வந்து வேலை செய்து "தோன்றிற் புகழோடு தோன்றுக" என்ற தெய்வ வாக்கை நிலைநாட்டுவா ராக.

திருவருள்

(மணி. திருநாவுக்கரசு முதலியார் அவர்கள் இயற்றியது.)

வெண்பா

எல்லாம் செயவல்ல எந்தை திருவருளால்
எல்லாம் இனிதாய் இருக்குமே—பொல்லாத
தீவினையும் போமே துகளாக அன்றிநல்
ஆவினையு மாமே அது. (1)

அவனே அனைத்தும் அருள்செய்வா னயின்
இவனே வினைசெய்தல் இல்லை—சிவனே
இவனே எனவுரைக்குஞ் சீர்மையினார்க் கென்றும்
அவனே வினையாம் அறிந்து. (2)

செய்த வினையெல்லாந் தேருது நானென்னும்
உய்தி யறியா ஒருவற்கு—எய்துமோ
எல்லாப் பொருளு மிழந்தே சிவ னருளில்
நில்லாது நிற்கு நிலை. (3)

வாய்ஞானம் பேசி வறிதே திரிகின்ற
பேய்ஞானங் கொண்டார்க்குப் பேசுவதென்—ஆய்ஞானம்
சுட்டி அறியுந் துணைத்தோ அதுவதுவாய்த்
தட்டி யறிவதன்ருே தான். (4)

உடம்பைச் சடமென்பர் ஒன்றுற்ருல் நைந்து
திடம்போகிச் சேர்ந்து திகைப்பர்—கடம்படவே
ஞானத்தைக் கொள்ளாது ஞானிகள்போ லேகுரைப்பர்
ஊனத்தை என்னென்பேன் உற்று. (5)

நானே அவனென்பர் நாணுதே அக்கணமே
தேனேபா லேயென்று செப்புவார்—மானுரை
அத்தகையோர் ஞானம் அவஞானம் என்பதன்றி
வித்தகமும் ஆமோ விளம்பு. (6)

எங்கள் சமயந்தான் ஏற்ற முடைத்தென்பர்
உங்கள் சமயந்தான் ஒன்றுமிலே—இங்கென்பார்
எந்தச் சமயந்தான் ஈசற்கொவ் வாதேயோ
இந்தச் சழக்கேன் இவர்க்கு. (7)

உலகைப் படைத்தான் உயிர்கட் களித்தான்
இலகு மறிவை இயக்கி—அலகில்
நன்மை புரிந்தானேல் நா மவர்க்கே ஆளாவோம்
தின்மை ஒழிந்து தினம். (8)

வயதுப் பரிசு

பீகானிர் சமஸ்தானத்தில் 112–வயதுள்ள காணு என்ற ஒருவர் இருக்கிருர். அவர் ஜாட் வகுப்பினர். அவர் இன்னும் களேப்பில்லாமல் நெடுந்தூரம் நடக்கிருர். அவர் பற்கள் உறுதியா யிருக்கின்றன. சில வருஷங்களுக்கு முன் நரைத்திருந்த அவரது தலே மயிர் இப்பொழுது திரும்பவும் கறுத்து விட்டது. பிக்கானின் மகாராஜாவுக்கு அவரைச் சமீபத்தில் பேட்டி செய்து வைத்தார்கள். மகாராஜா அவரை ஒருவாரம் அரமனேயில் வைத்து உபசரித்தார். அவருக்குத் தலேப்பாகை ஆபரணம் முதலிய வெகுமதிகளும் வயது ஒன்றுக்கு ஒரு ரூபாய் வீதம் 112 ரூபாயும் கொடுத்தார். பின் அவரை அரமனேயிலிருந்து மோட்டாரில் வைத்து நகரமெங்கும் ஊர் வலஞ் செய்தார்கள்.

காதற் பலி

(ஸ்ரீமான். எ. சோக்கலிங்கம் பிள்ளை அவர்கள் எழுதுவது.)

(பதிப்புரிமை ஆசிரியருக்கு:)

இராஜ புதனத்தில் ஜெயபுர சமஸ்தானத்தில் அஜீத் சிங்கு, அருண சிங்கு என்றும் பெயரையுடைய வாலிபர் இருவரிருந்தனர். அவர்கள் மிக்க செல்வாக் குள்ளவர்கள். அஜீத் சிங்கு, ஜெயபுரத்தி லுள்ள பலிதாஞ கோட்டை என்னும் கிராமத்தி லிருக்கும் ஜெய மங்கள சிங்குக்கு ஒரே புதல்வியான சந்தன குமாரியை மண முடிக்க ஆவ லுடையவனு யிருந்தான். அருண சிங்கு என்பவனும் அவள் மீது மிக்க காதல் கொண்டிருந்தான். அவ் விருவர் காதல் அவ்வாறிருக்க, சந்தன குமாரி அவ்வாலிபருள் எவரை தன் மனத்திற் கியைந்த மணவாளனக மதித்திருந்தாள் என்பது அவ ளுக்குத் தான் தெரியும். சந்தன குமாரியின் தாய்க்கு அவ்விரு வரும் முன்னமே தெரிந்த பெரு மதிப்புள்ளவர்க ளாதலால், அவள் அவர்க ளிருவரையும் தான் வசித்து வரும் பலிதாஞ கோட்டைக்கு வந்து, தனது வீட்டில் சில நாள் தங்கி யிருந்து போகும்படி அவர்களை அன்போ டழைத்தனள். அவர்கள் அவ் வாறே வந்து சேர்ந்தனர்.

அவ் விருவரும், அங்கு சில நாள் தங்கி நல் விருந்துண்டு சந் தோஷமாகக் காலம் போக்கினர். சந்தன குமாரியும் அவர்கள் உளங் களிக்க முக மலர்ந்து, சிறிதும் வித்தியாச மின்றி மிக்க மரியாதை யோடு உபசரித்து வந்தாள்.

ஒரு நாள் இரவு எல்லோரும் உண வருந்திய பின்னர், தங்கள் தங்கள் படுக்கை யறைக்குப் போய் விட்டனர். நள்ளிரவு தொடங் கிற்று. எங்கும் அமைதி நிறைந்திருந்தது. அந் நேரத்தில், அருண சிங்கு படுக்கை யறையின் கதவை யாரோ மெல்லத் தட்டுவதாக அவன் காதிற் கேட்டது. கதவைத் தட்டுவது யாரென் றறிய அவன் விரைந்து எழுந்து சென்றான். கதவைத் திறந்தான். சந்தன குமாரி வெளியே நிற்பதைக் கண்டு பிரமித்தான். சந்தன உயிர்க் கொலை செய்தவள் விழிப்பது போல மிரள விழித்துக்கொண் டிருந்தாள். பேச முடியவில்லை. அவள் உடம்பு நடுக்க முற்றது. கை கால்கள்

விதிர்ப்புற்றன. நிற்கக் கூட முடியவில்லை. கதவைப் பிடித்துக் கொண்டு நின்ருள்.

அருணு சிங்கு, அந்நிலைமையிலிருக்கும் சந்தனுவைப் பார்த்து "ஆ கடவுளே ! சந்தனு!! உனக்கு என்ன நேர்ந்தது ? நீ யென்ன தவறு செய்தாய்?" என்று கேட்டான்.

"ஐயோ, சத்தமிடாதீர்" என்று மெல்லிய குரலாற் சொல்லிக் கண்ணீர் விட்டாள்.

"நானு, நான் என்ன செய்தேன் ! என்னைத் தொடாதீர்" என்ருள்.

உடனே அருணு சிங்கு அவள் கையை மெல்லப் பிடித்துத் தன் அறைக்குள் அழைத்துப்போய்த் தன் படுக்கை மீது அவளை உட்காரச் செய்தான். விளக்கு நன்ருக எரிந்து கொண்டிருந்தது. அவ் வெளிச்சத்தால் ஏதோ ஒன்றைப் பார்த்து, அவன் உரக்கக் கூவிச் சொல்ல வாயெடுத்தவன் தன்னை அடக்கிக் கொண்டான். அவளுடைய வலக்கையில் இரத்தம் தோய்ந் திருப்பதைப் பார்த் தான்.

"சந்தனு! சந்தனு! இஃதென்ன விபரீதம். நீ யென்ன வேலை செய்தாய்" என்று நடுங்கிய குரலுடன் கேட்டான்.

"இது அவருடைய இரத்தம். நான் அவரைக் கொன்று விட்டேன்" என்று காதுக்குச் சரியாய்ப் புலப்படாதபடி மெதுவாகச் சொன்ஞள்.

"நீ அவரைக் கொன்ருயா! என்ன சொல்லுகிருய், எவரை?"

"அஜீத் சிங்கு, தன் அறையில் நல்ல உறக்கத்தி லிருந்தார். எனக்கு முன்னமேயே அவர் மீது கோப மிருந்தது. அக்கோபாவேசத்தால் புத்தி தடுமாறி அவரைக் குத்திக் கொன்றுவிட் டேன்" என்ருள்.

அவள் கூறிய அப் பயங்கரமான சொல்லைக் கேட்டதும், அருணு சிங்கு பேச முடியாமல் பிரமித்து மரம் போல் அசையாது நின்று விட்டான்.

"சந்தனு! நீ என்ன கனுக் கண்டனையா? நீ முன் சொல்லியதைத் திரும்பவுஞ் சொல்லாதே. இந்தக் கையா அஜீத் சிங்கைக்

கொன்றது ? அது உன்னு லாகாத காரியம். நான் நம்பவே மாட்டேன்'' என்ருன்.

"நீர் நம்பத்தான் வேண்டும். ஐயோ ! காலையில் அவருடைய சவத்தைப் பார்த்து விட்டால், இந்தச் சந்தனு பிழைக்க மாட்டாளே ! என் செய்வேன், நீர் தான் என்னைக் காப்பாற்ற வேண்டும். அஃது உம்மால் கூடுமானதே'' என்ருள்.

"நீ என்ன சொல்லுகிருய் ?''

"அவர் பல தடவை என்னை மானங் குலைக்க முயன்ருர்.''

"ஆகையால், நீ அவர் உயிரைப் போக்கினுயா?''

"உங்களுக்கு என்னைத் தெரியாது. எனக்கு ஒருவர் மீது அருவருப்புத் தோன்று மாயின், நான் பொல்லாதவளாய், என்னையு மறியாத கோபத்தால் துன்புறுத்தி விடுவேன். அவர், என் பெண் தகைமைக்குப் பங்க முண்டாக்கப் பார்த்தார். ரஜ புத்திரக் கன்னிகைகள் இத்தகைய இழி தொழிலுக்கும் பிறர் பழித்தற்குஞ் சிறிதும் மனம் பொறுக்கார்கள்'' என்ருள்.

இப்படிப் பட்ட சமயத்தில் சிறிதுங் கால தாமதஞ் செய்வது கூடாது. பொழுது புலர்ந்ததும் கொலை நடந்திருப்பதை எல்லோருந் தெரிந்து கொள்வார்கள். இவ் விஷயத்தில் அருணசிங்கு என்ன செய்ய வேண்டுமோ அது அவனுக்குத் தெரியவில்லை. சிறிது நேரம் யோசித்தான். சந்தனு ஆபத்தி லகப்பட்டுக் கொண்டாளே, அவ் வாபத்தினின்றும் அவளை எவ்வாறு நீக்குவது என்ற கவலையே அருணுவுக்கு விரைவில் ஓர் உபாயத்தைக் காட்டியது.

"நான் உன்னைக் காப்பாற்றுகிறேன் சந்தனு, பயப்படாதே ! நீ உன் னறைக்குப் போய்ப் படுத்துக் கொள்'' என்ருன்.

"நீர் என்னைக் காப்பாற்றுவீ ரென்று நா னறிவேன். இக்காரியத்திற்கு என்ன உபாயஞ் செய்வீர்கள்'' என்று மிக்க துக்கத்தோடு கேட்டாள்.

"நான் இப்போதே இவ்விடத்தை விட்டுப் போய் விடப் போகின்றேன்.''

"ஐயோ ! பிறகு நா னெப்படி ?''

"நீ இங்கேயே கவலை யற்று அமைதியா யிரு.''

"நா னெப்படி தப்புவே னென்பது எனக்குத் தெரியவில்லையே'' என்ருள்.

"நீ பயப்படாதே, உன் மீது சந்தேகம் உண்டாகாது. சந்தேகம் என் மீது ஏற்படும். அஜீத் இறந்திருக்கிறான், நானும் ஓடிப் போனால் சந்தேகமெல்லாம் என் மீதே உண்டாகும். இதுவே உன்னைக் காப்பாற்றும்" என்றான் அருண சிங்கு.

அருணசிங்கு, சந்தனுவை அறைக்கு வெளியே நிற்கும்படி சொல்லி அடுத்த நிமிஷமே ஒருவருக்குந் தெரியாமல் பலிதான கோட்டையை விட் டகன்றான்.

காதலியின் பொருட்டுத் தன்னுயிரையும் பலியிடச் சம்மதித்தவனைதால் "துணையோ டல்லாது நெடுவழி போகேல்" என்பதையும் மறந்து, பயத்தையுந் துறந்து அக்காரிருளிற் கடு நடை நடந்தான். பொழுது புலருவதன் முன் வெகு தூரஞ் சென்றான். போகப் போக நடை தளர்ந்தது. மேல் நடக்க முடியவில்லை. களைத்துப் போனான். அதனால் அவன் ஓர் ஏழையின் குடிசை வீட்டில் தங்க நேர்ந்தது. வழி நடந்த அலுப்பினாலும், அன்றிரவு நேர்ந்த கொடிய பயத்தாலும் அவன் சுரத்தால் பீடிக்கப் பட்டு மிகவும் கஷ்டப் பட்டான். பிறகு சில தினங்கள் கழிந்து குணமடைந்து அவ்வேழைக் குடிசையிலேயே ஒன்றரை மாதம் இருந்து வந்தான். தடையுத் தரவினால் தான் பிடிக்கப் படுவோமென (Warrant of arrest) ன்னும் பயத்தால் பரதபுர சமஸ்தானத்திற்கு ஓடிப் போனான்.

அங்கே அவன், வெளியூர் சமாசாரமொன்றும் எட்டுவதற்கில்லாத ஒரு சிறு கிராமத்தில மூன்று மாதந் தங்கியிருந்தான். மூன்று மாதக் கடைசியில், ஜெயபுரம் போகும் பேராவல் அவனைப் பிடித்துக் கொண்டது. அஃது ஏனெனின், அங்கே அவன் தாய் வசித்து வந்ததால், அவளைப் பார்க்க வேண்டுமெனவும், அதனால், தனக்கு என்ன ஆபத்து நேர்ந்தாலும் அதற்குட் படுவதெனவும், ஆபத்து நேராவிடின் தன் தாயைப் பார்த்த பிறகு, வேறு தேசம் போவதாகவும் தீர்மானித்துக் கொண்டான்.

பிறகு, அருண சிங்கு ஜெயபுரஞ் சேர்ந்து, தன் தாய் வசிக்கும் வீட்டை அடைந்தான். அங்கே, தன்னறையில் தன் தாயைக் கண்டு வணங்கினான். அவள், பிள்ளையைப் பார்த்ததும், "அப்பா மகனே!" வெகு நாளாய் உன்னைக் காணோமே; நீ போகும் வழியில் மிருகங்கள் அதிகமாகையால் அவைகளின் வாயில் அகப்பட்டுக் கொண்டாயோ என்று நினைத்திருந்தேன். தெய்வ

கிருபையால் உயிர் பிழைத்து வந்தனையே அதுவே, போதும்'' என்றாள்.

தன் கழுத்தைக் கட்டிக் கொண்டிருந்த தாயின் கையை மெதுவா யெடுத்து விட்டு "என தன்புள்ள தாயே! எனக்கு இங்கு யாதொரு ஆபத்து மில்லை. ஆனால் நான் ஓடி மறையும் அவஸ்தையில் இருக்கின்றேன்'' என்றான்.

"என் செல்வமே! நீ ஓடி மறையவும் வேண்டுமோ?'' என்று மிக்க வியப்புடன் பல தடவைகள் வினவினாள்.

"எக் காரணத்தா லாகிலும் அந்தச் சந்தேகம் ஒழிந்திருக்கக் கூடுமோ என்று தனக்குள்ளே பேசிக் கொண்டான்.''

"அஜீத்சிங்கு'' என்று கதறினான். "அம்மா! நீங்கள் அவனைப் பற்றி ஏதாவது கேள்வியுற் றிருக்கிறீர்களா?''

"ஆம், ஆம், அவனைப் பற்றி யென்ன? நீ என் பித்துப் பிடித்தவன் போலிருக்கின்றாய்? அஜீத் நாளையதினம் ஜெயபுரத்தை விட்டுப் போகிறான். அதைக் கருதியா நீ அவ்வாறு கூறினை?''

"என்ன ஆச்சரியம்'' என்று அருணசிங்கு பெரு மூச்சு விட்டு "ஆனால், அவன் இறக்க வில்லை?'' என்றான்.

"அஜீத்சிங்கு ஏன் இறக்க வேண்டும்?'' என்று அவன் தாய் பெரு வியப்போடு கேட்டாள்.

"ஆனால், அவன்—அவன்—காயப்பட்டான்.''

"நான் அதைப் பற்றி ஒன்றும் கேள்விப்பட வில்லையே.''

தன் தாய் சொல்லியதைக் கேட்டதும், அருணசிங்கு தன்னை மறந்தவனாய்க் களிப்பின் மிகுதியால் ஆடிப் பாடிக் குதித்தான்.

"அம்மா! சந்தனா எங்கே யிருக்கின்றாள், தெரியுமா?''

"இங்கே அவள் வீட்டிலேயே.''

"முன்னிருந்த அதே வீட்டிலேயா?''

"ஆம்.''

"அம்மா! சற்றுப் பொறுங்கள். இதோ ஐந்து நிமிஷத்தில் வருகிறேன். வந்து, உங்களுக்கு எல்லாச் சங்கதிகளையுஞ் சொல்லுகிறேன்'' என்று சொல்லிப் பைத்தியக்காரனைப் போல் வீட்டை விட்டு ஓடிப்போனான்.

II

அருணசிங்கினால், அந்தச் சந்தேகத்தின் உண்மையைத் தெரிந்து கொள்ள முடிய வில்லை. அன்றிரவு, சந்தனா அவனிடத்

திற் சொல்லி ஒத்துக்கொண்டது உண்மையா யிராது. ஏதோ நோயினல், அவள் சித்த விகாரங் கொண்டு அவ்வாறு சொல்லி யிருக்க வேண்டுமே தவிர வேறில்லே.

தான் பட்ட பாடுகளே நினைந்து நகைத்தான். இன்னுமொரு கால், அவ ளழகிய முகத்தைப் பார்க்கவும், அவளோடு பேசவும், அவள் கையைப் பிடிக்கவும் ஆசை கொண்டான்.

உடனே அவள் வீடு போய்த் தான் வந்திருப்பதை அவளுக்குச் சொல்லி அனுப்பினன். இரண்டு மூன்று நிமிஷங் கழித்து ஒரு வேலேக்காரன் ஓடி வந்து "ஐயா! இப்படிப் போங்கள்" என்று வழி காட்டினன்.

அருணசிங்கு உள்ளே சென்முன். சந்தன பொற்பாவை போல் நின்றிருந்தாள். அவளே முக முகமாய்ப் பார்த்து அவள் கையைப் பிடித்து முத்தமிட முயன்முன். அதற்கு "என்னைத் தொடாதீர்கள்."

"ஏன் முன்னமேயே வரக் கூடாது" என்று மெல்லிய குரலால் கேட்டாள்.

"நான் இப்போதுதான் சங்கதிகளேக் கேள்விப்பட்டேன். கேட்டதும் பிரமித்துப் போனேன். அந்தக் காரியம் நடக்க வில்லேயே? கடவுளுக்கு வந்தனம். நான் நோயா யிருந்ததால், எனக்கொரு சமாசாரமும் தெரியவில்லே. நீ இப்பொழுது எல்லா வற்றையுஞ் சரியாய்ச் சொல்" என்முன்.

சந்தன, முகவாட்ட முற்றவளாய் "அவர் இறக்க வில்லே; ஆனல், தசையின் மேல் பட்டுக் காய முண்டாயிற்று" என்று மெல்லச் சொன்னள்.

அருணசிங்கு பெருமூச் செறிந்து "நான் அதைக் கனவென்று தான் நினைத்தேன்."

"நான், அவர் தூங்கிக் கொண்டிருக்கையில், என் கண்ணே மூடிக்கொண்டு குத்தினேன். உடனே, அவர் விழித்துப் பார்த் தார்.

"நீ உண்மையில் அவரைக் குத்தினயா?"

"அது உண்மையே. அவர் புஜத்திற் பட்டுக் காய மாயிற்று. நான் வந்துவிட்டேன். அவரே காயத்தைச் சுத்தஞ் செய்து கட்டுக் கட்டிக் கொண்டார்."

"பிறகு, அவரே என்னை வந்து பார்த்தார். அவருக்கு என் மீது கோப முண்டாயிற்று. அவர் என்னை—அதை நான் சொல்வ தெப்படி?" என்றாள்.

"சந்தனு! நீ யென்னைப் படுகொலை செய்யத் துணிந்தனை. ஆனால், கடவுளுக்குச் சம்மதமில்லை. கொடிய வருத்தத்தை அனு பவிக்க நேர்ந்தது. இன்னு மென்ன செய்யப் போகின்றாய்? செய், செய்" என்றார்.

அவர் என் பெரும் பிழையைப் பொறுத்தார். இச் சம்பவத் தைப் பிறர் அறியாதபடி காப்பதாகவும் வாக்குத் தந்தார். அது வன்றி."—

"நான் ஓடிப் போனதின் காரணம் அவர் அறிவாரா?"

"தெரியாது, நான் சொல்ல வில்லை."

"போகட்டும். இப்போது நாம் இருவரும் பாக்கியசாலிகள். இனி நாம் சீக்கிரமாக மண முடித்துக் கொள்வோமே" என்றார்.

"நீங்கள் அதனை மறந்து விடுங்கள், மறந்து விடுங்கள். நீங்க ளென்னை விட்டுப் பிரிந்த பிறகு ஒன்றரை மாதங் கழித்து, அதி விமரிசையாக அவருக்கும் எனக்கும் விவாகம் நிறைவேறிற்று."

"அஜீத்சிங்கா! அட சனியனே!"

"அவர் தான் என் ஆசைக் கணவர்" என்றாள்.

"அச் சொல்லைக் கேட்டதும், அருணுசிங்கின் மனந் திடுக் கிட்டது, பிரமித்து நின்றான், தன்னை மறந்தான், விறைத்துப் போனான், முகங் கரைந்தான், பெருமூச் செறிந்து "சந்தனு நீ என்னைப் பரிகசிக்கின்றனையா?"

அந்த சமயத்தில் "அறிவிலாதவனே!" என்று இடி இடித் தாற் போலக் கூவி வையுஞ் சில கடு மொழிகள் அருணுசிங்கின் காதிற் கேட்டன. அவ்வாறு வைதவன் யார்? அஜீத் சிங்கு. அவன், அருணுசிங்கின் முன் வந்து "வெளியே போ" என்றான்.

அருணுசிங்கு அவன்மேற் றிரும்பினான். இரண்டொரு நிமி ஷம் வரை ஒருவரை யொருவர் இமை கொட்டாது கோபக் கண்க ளோடு உற்றுப் பார்த்துக்கொண்டு நின்றார்கள்.

அஜீத்சிங்கு "நீ வெளியே போகிறாயா, இல்லையா?" என்று ஆர்ப்பரித்தான்.

அருணசிங்கு அவ்விடத்தை விட்டு அசையவில்லை. அஜீத் சிங்கு தன் வேலைக்காரர்களைக் கூவி யழைத்தான். அவர்களும் ஓடி வந்தார்கள்.

"இந்த வெட்கங் கெட்டவனைக் கொண்டுபோய்த் தெருவிற் றள்ளிவிடுங்கள்" என்று கூவினன். அவ்வாறே அருணசிங்கு தள்ளப்பட்டான். உடனே சந்தன மூர்ச்சையாய்க் கீழே வீழ்ந் தாள்.

III

அருணசிங்கு, தன் சொந்த பூஸ்திதியையும் கவனிக்காமல் ஜெயபுரத்தை விட்டுத் தல யாத்திரை செய்யப் போய் விட்டான். நெடுநாளாக ஒரு தரமேனுந் தன் வீட்டைப் பார்க்க திரும்பி வந்தா னில்லை.

அஜீத்சிங்கு தன் மனைவியுடன் ஜெயபுரத்திலேயே யிருந் தான். ஆனல், அவன் மகாராஜாவுக்கு விரோதமாகச் சதி யோசனைக் கூட்டத்தார்க்குத் தலைவனக விருந்தா னென்பதை, அரசாங்கத்தார் கண்டு கொண்டனர். இராஜத் துரோகங் கண்டு பிடிக்கப்பட்ட தென்று தெரிந்ததும, அஜீத் ஊரை விட்டோடிப் போனன். ஆனல், அவனை விரைவில் பிடித்து விட்டார்கள். அவனை ஜெயபுரத்திற்குக் கொண்டு வந்தார்கள். அவனுடைய பூஸ்திதி யாவும் பறி முதல் செய்யப்பட்டு, அவன் ஆயுள் பரியந்தம் சிறைவாசஞ் செய்ய அரசாங்கத்தார் தண்டனை விதித்தார்கள்.

அஜீத் சிறையி லடைக்கப் பட்டபோது, அவன் மனைவி சந்தன வுக்கு ஒரு பெண் குழந்தை பிறந்திருந்தது. அதன் பெயர் லாலி.

பல வாண்டுகள் மெல்லக் கழிந்தன. சிறைக்கூடம் புகுந்த வன் விடுதலை யடைவா னென்னும் நம்பிக்கை யில்லை. சந்தன, பெரிய துன்பத்தினல் வருந்தினள். ஏழாண்டிற்குள் அவள் திக்கற்றவ ளானள். வறுமையாற் பீடிக்கப்பட்டாள். அவளிட மிருந்த பொருளெலாங் கரைந்தன. மகாராஜாவுக்கு, அவள் கண வன் மீதிருந்த கோபத்தால், ஒருவரும் அவளுக்கு உதவி புரியத் துணியவில்லை. என் செய்வாள் பாவம், அருணசிங்கை நினைத் தாள்.

பிறகு, அவள், அநேக வாரங்களுக்கு அருணவை நினைக்க வில்லை. தன் மகள் லாலியைப் பார்த்துக் கண்ணீர் உகுத்

தாள். "குழந்தாய்! உனக்குத் தந்தை யிருந்தும், நீ அவரைப் பார்த்துச் சந்தோஷிக்கும் பாக்கிய மில்லாமற் போயிற்றே. உன்னழகையும் உன் அழகிய மொழியையுங் கேட்க அவர்க்கு அதிர்ஷ்ட மில்லாமற் போயிற்றே. நாம் வறுமையோடு வாழுங் கால மாயிற்றே. நினைத்தற்கும் யோக்கியதை யில்லாதவளாகிய நான், உன்னுடைய நிர்ப்பாக்கிய நிலைமையைக் கண்டு, என் மனம் வருந்துவதால், மீண்டும் அருண சிங்கை நினைக்க லானேன்' என்று துயர முற்றாள்.

மகாராஜாவுக்கு அருண சிங்கு மேலான நண்ப ரெனவும், அவரிடத்தில் சிங்குக்கு மிக்க செல்வாக் குண்டெனவும் சந்தனவுக்கு முன்னமே தெரியு மாதலால், அவர் தனக்கு உதவி செய்யக் கூடுமென எண்ணினாள். அருண சிங்கின் ஒரு சொல்லே, தன் கணவனையும் அவரது ஜாகீர் முதலிய பூஸ்திதிகளையும் மீளக் கொண்டு வந்து சேர்க்கு மெனவும், அவரது வேண்டு கோளுக்கு மகாராஜா "இல்லை" என்று சொல்லாமல் இணங்குவா ரெனவும் அவளுக்கு நன்றாய்த் தெரியும். ஆதலால், அவளது எளிய நிலைமையே அருண சிங்கை நினைக்கத் தூண்டியது.

அருண சிங்கு தல யாத்திரை முடிந்து, இப்போது ஜெயபுரத்திற்கு வந்திருக்குஞ் சங்கதியைச் சந்தன கேள்வி யுற்றாள். அவனுக் கொரு கடித மெழுத விரும்பி ஓர் கடித மெழுதினாள். அதனைத் தபாலில் போடப் போகுஞ் சமயத்தில், அவள் மனத்தில் ஒரெண்ண முண்டாயிற்று. கடிதத்தை நிறுத்தித் தன் புதல்வியையழைத்து, அக் கடிதத்தை அவளிடங் கொடுத்து "லாலி! இக் கடிதத்தைக் கொண்டுபோய் அருண சிங்கினிடங் கொடு. வேறொன்றுஞ் சொல்லாதே. அவர் இதற்கு மறு உத்தரவு கொடுக்கும் வரையும் அங்கேயே காத்திரு" என்று சொல்லி யனுப்பினாள்.

லாலி கடிதத்தை வாங்கிக் கொண்டு போகு மளவும், தான், முன்னமே அருண சிங்கு விஷயத்தில் நடந்து கொண்டவற்றையெல்லாம் மறந்திருந்தாள். லாலி சென்றதும், அருணவை முன்னே அவ மரியாதையாகப் பேசியதும், தெருவிற் றள்ளி அவமானஞ் செய்ததும் அவள் நினைவுக்கு வந்தது. அன்றியும், இரத்தக் கொதிப்புள்ள இரண்டு க்ஷத்திரியர்களுக்கு முள்ள பிராணபத்தான பகையையும், அருண சிங்கின் உருவத்தை, விளையாட்டுப்

பொருள் போலக் கருதித் தன் மனத்தினின்றும் உடைத் தெறிந் ததையும் நினைத்து வருந்தினுள்.

அவ்வித அவ மரியாதையான காரியங்களை அனுபவித்த அருண சிங்கின் மனம், தீமைக்குத் தீமை செய்ய வேண்டுமென்று நினையாமல், தன்னுடைய கடிதம் அவனுக்கு இன்பந் தருமா வென்று எண்ணிப் பாராமல், பதறி யெழுதி யனுப்பி விட்டோமோ என்றும், மறுபடியும் கடிதத்தை, மீண்டும் வரவழைக்கலா மென்றும் யோசித்தாள். ஆனுல், லாலி, போய் வெகு நேரமாயிற்று. தானெழுதிய கடிதத்தால் என்ன வருமோ வென்று சந்தனு பயந்திருந்தாள். மறு கடிதம் வருமென நம்பி யிருந்தாள். மீண்டும் பழைய சங்கதியை நினைந்து நினைந்து பயந்து கொண்டிருந்தாள்.

நெடு நேரம் கழித்து, லாலி ஒரு கடிதங் கொண்டு வந்து கொடுத்தாள். அக் கடிதத்தைப் பார்த்ததும், அதனுள் என்ன விருக்கிறதோ வென்று திகிற் பட்டாள். கை நடுக்கத்தோடு அதனை வாங்கினுள். ஆனுல் அதனைத் திறந்து பார்க்க அவள் மனந் துணிய வில்லை.

“குழந்தாய்! நீ அவரைப் பார்த்தனையா?” என்ருள்.

“ஆம், அம்மா.”

“உன்னேடு அன்பாய்ப் பேசினரா?”

“இல்லை, அம்மா.”

அதனைக் கேட்டதும் சந்தனுவுக்குத் துக்கமும் வருத்தமும் மேலிட்டது.

“இக் கடிதத்துள் என்ன அடங்கி யிருக்கும்? பரிகசித்தற்கிடமான பகையைக் காட்டுஞ் சிரிப்பே யிருக்கும். அதனைத் தவிர்த்து அவரிட மிருந்து வேறெதனை யெதிர் பார்க்கலாம். நாம் அவரை நாவினுற் சுட்ட புண் சிறிதேனும் ஆறுமா? ஆருதே” என்று தானே சொல்லி வருத்தப் பட்டாள்.

அவ்வித எண்ணங்களால் வெகுநேரம் வருந்திய பிறகு, லாலியைப் பார்த்து “இன்னு மென்ன நடந்தது சொல்” என்ருள்.

“அம்மா! ஒரு வேலைக்காரன் வந்து, என்னை அவரிடம் அழைத்துப் போனுன். அவர் என்னைப் பார்த்து, அஃதென்ன வென்று கேட்டார். நான் கடிதத்தைக் கொடுத்தேன். அவர்

என்னை வெகு நேரம் உற்று நோக்கினார். கடிதத்தை நாலைந்து தரம் திருப்பித் திருப்பிப் பார்த்தார்.

"வெகு நேரம் பேசாது நின்றார். நான் நிற்பதைப் பார்த்து என்னை உட்காரச் சொன்னார். மீண்டும் என்னை உற்றுப் பார்த்தார்.

"இன்னும் வெகு நேர மாயிற்று. கடிதத்தை இரண்டு தரங் கீழே போட்டார், இரண்டு தரமும் எடுத்தார். அதனைப் பிரித்துப் படித்தார். அம்மா, நீங்கள் நெடு நேரமாக எழுதின கடிதத்தை அவர் சீக்கிரத்தில் கொளுத்தி விட்டார். அது தான் அவரிட மிருந்த கெட்ட செய்கை."

"பிறகு, இந்தக் கடிதத்தைக் கொடுத்தார். அதனை வாங்கிக் கொண்டு வரும்போது, மறுபடியும் என்னைக் கூப்பிட்டு, என்னைத் தூக்கிக் கொண்டார். அம்மா! அவர், என் கன்னங்களிலும், கண் களிலும், நெற்றியிலும் முத்த மிட்டார். பிறகு, கீழே இறக்கி விட்டதும் நானோடி வந்து விட்டேன்."

"அடி என் செல்வமே! நீ விளையாடப் போ" என்று பெண்ணை யனுப்பி விட்டாள்.

லாலி சென்றதும், சந்தனு கடிதத்தைப் பார்த்து "அவர் என் கடிதத்தைப் படித்துக் கொளுத்தினார். நான் அவர் கடிதத் தைப் படியாமலே கொளுத்துவேன். நான் அவருக் கெழுதப் பைத் தியம் பிடித்தது" என்று கூறி,

விளக் கொன்றைப் பொருத்தினாள். கடிதத்தைக் கொளுத் தப் போகும் சமயம் அவளுக் கொரு எண்ணம் உதித்தது. நான் அதனைப் பிரித்து மேலாகப் பார்த்து மறந்து போவது நல்ல தாகும் என்று மிகு தீவிரமாகக் கடிதப் பையைக் கிழித்து, உள்ளே யிருந்த கடிதத்தை ஒருவாறு படித்துப் பார்த்தாள். அதில், கீழ்க் கண்ட வரிகள் அவளுடைய கண்ணிற்குப் புலப்பட்டன.

"நான் இப்போது தான் அரண்மனைக்குப் புறப்படுகிறேன். அஜீத் சிங்கின் மன்னிப்புக்காக முழங்காற் படியிட்டுக் கெஞ்சிக் கேட்டுக் கொள்வேன்" என்று படித்ததும் சோர்ந்து போனாள்.

அவள் கையிலிருந்த கடிதம் நழுவி வீழ்ந்தது. "தங்குறை தீர்வுள்ளார் தளர்ந்து பிறர்க் குறூஉம், வெங்குறை தீர்க்கிற் பார் விழுமியோர்" என்பது போல, இவ்வித பெருந்தகைமை வாய்ந்த புருஷரு மிருப்பார்களா! அருணா சிங்கு எந்த அறையிலிருந்து

தெருவில் தள்ளப் பட்டனனே, அதே அறையிலிருந்த படுக்கையின் மீது சாய்ந்தாள்.

அஜீத் சிங்கு என்ன வானன்? அவன் மன்னிக்கப் பட்டு விடுதலை அடைந்தான். அவனுடைய பூஸ்திதி யெல்லாம் திரும்பக் கிடைத்தன. மகாராஜாவின் தயவையும் பெற்றான்.

அருணு சிங்கு என்ன வானன்? அவனுடைய பூஸ்திதி யிருந்த விடத்திற்கே போய், அவனுயுள் பரியந்தம் தங்கி விட்டான். அவன் ஜனங்களுக்கு நன்மை புரிவதிலேயே காலத்தைக் கழித்தான். தான் விவாகஞ் செய்து கொள்வதை வெறுத்தான். மகாராஜாவினும், அவனை விவாகஞ் செய்து கொள்ளும்படி தூண்டக்கூட வில்லை.

காதலே ஒருவனைப் பெருமை படுத்தும், காதலே ஒருவனுக்கு அவமதிப்பைத் தந்து, அவனைப் பயங்கரமான விலங் காக்குகிறது. எவ்வாருயினும், அருணு சிங்குக் கிருந்தது போன்ற காதல் அருமையினும் அருமைதான்.

பற்பல சாமாச்சாரங்கள்

சென்னை

சட்டசபையில் ஸ்திரீகளுக்கும் ஸ்தானம்:—இந்தியா சட்டசபையில் ஸ்திரீகள் கூட ஸ்தானம் வகிக்க இடம்கொடுக்க வேண்டுமெனச் சட்டம் செய்ய மிஸ்டர் துமேஷியா கொண்டுவந்த பிரேரணை நிறைவேறிவிட்டது. அடுத்த தேர்தலில் ஸ்திரீகள் சிலர் அபேட்சகராக இருப்பரென நாம் நம்பலாம். இப்போது சென்னை, பம்பாய் மாகாணங்களில் ஸ்திரீகளுக்கு இந்த சுதந்தரம் வாய்த்திருக்கிறது: இதுபோல் மற்ற மாகாணங்களும் இவைகளின் அடிச்சுவட்டைப் பின்பற்றி நடக்குமென்று எண்ணுவோம். இந்தியா சட்டசபை நடவடிக்கையில் அனேகமாய் எல்லோரும் இதற்குச் சாதகமாகவே யிருந்தார்கள். கோமாளிபோல் 'எனக்கும் ஒரு மனைவி யிருந்தால் நல்லது' என்று பேசின மிஸ்டர் யாகுப் மாத்திரம் இந்தப் புது நடவடிக்கைக்கு ஒத்துக்கொள்ளவில்லை. ஸ்திரீகள் சட்டசபைக்கு அருகரல்ல வென்றும், அவர்கள் சட்ட

சபை வேலையைவிட மேம்பட்ட வேலைக்குச் சிருஷ்டிக்கப்பட்ட வர்க ளென்றும், பின்னுக்கு முன் உதையும்படி பேசிப் பலர் சிரிக்கும்படி செய்துகொண்டார். ஸ்திரீகள் சட்டசபை ஸ்தானம் வகித்தல் தேச முன்னேற்றத்துக்கு அவசிய மென்பதை நாம் எடுத்துரைக்க அவசியமில்லை. (சுதேச மித்திரன்.)

ஜெர்மனியில் இந்திய மாணவர்

உலகத்திலேயே இந்திய மாணவரை மிகுந்த பரிவோடு வர வேற்கும் தேசம் ஜெர்மனி தான். அங்கு அதிக நெருக்கமான பர்லின் நகரைவிடச் சிறிய சர்வ கலாசாலை நகரங்களில் ஆசிரியர் களுக்கும் மாணவர்களுக்கும் அதிக அன்னியோன்யப் பழக்கம் இருக்கின்றது. எங்கும் நமது மாணவர்களின் க்ஷேமத்தைப் பற்றியும் பிற்கால வாழ்வைப்பற்றியும் ஆழ்ந்த சிரத்தை காட்டப் படுகின்றது. ஆசிரியர்களிடம் நெருங்கிய பழக்கமும் நட்பும் ஏற் படுவதற்காக இரண்டு வருஷங்களுக்கு முன் பிரபல ஜெர்மன் ஆசிரியர்களுக்கு இந்திய மாணவர் ஒரு தேக்கச்சேரி நடத்தி னர். அவர்களுடன் தனியாகப் பேசியதிலிருந்தும் அவர் கள் செய்த உபந்நியாசங்களி லிருந்தும் அவர்களிடம் அரசியல் வியாபார சம்பந்தங்களால் பாதிக்கப்படாத உண்மையான கல்வி சம்பந்தமும் இருப்பதாகத் தெளிவாயிற்று. மாணவருக்கும் ஆசிரியருக்கும் நெருங்கிய சம்பந்தம் ஏற்படச் செய்த முதல் முயற்சி திருப்திகரமாக நிறைவேறினும் அதன் பிறகு அச் சிநேகப் பான்மையை வளர்க்க ஒன்றும் செய்யப்படவில்லை. மத் திய ஐரோப்பா இந்துஸ்தானச் சங்கத்தின் மூலமாக இந்தியர் தங்களா லியன்றதைச் செய்தாலும் பர்லின் நகரில் கொஞ்சம் பராமுகமும் அலட்சியமும் கவலை யின்மையும் காட்டப்பட்டது. இருந்தாலும் நிர்வாகக் கமிட்டியின் முயற்சியால் சமூக வேலை களில் மறுபடியும் ஊக்கமும் சிரத்தையும் காட்டப்படுகிறது.

கடந்த வருஷம் டிசம்பர் மாதக் கடைசி இந்திய தேசிய காங்கிரஸ் கூட்டத்தை இந்தியாவில் நடப்பதுபோல அதே சமயத் தில் ஜெர்மனியிலும் தேசிய தினம் ஒன்றைக் கொண்டாட ஏற்பாடு

செய்யப்பட்டது. அதில் இந்தியர் பலர் பேசியதோடு, சீன, பாரசீக, துருக்கிய, ருஷ்ய மாணவர்களும் அநுதாபங்காட்டிப் பேசினார்கள். இதிலிருந்து இந்தியர்களுக்குள் ளிருந்த ஒற்றுமை உறம்பெற்ற தோடு ஜெர்மானியர் முதலிய பிற தேசத்தினரும் இந்தியா விஷயங்களில் அதிகப் பரி காட்ட ஆரம்பித்தனர். மறுபடியும் இந்திய மாணவரையும் ஜெர்மன் அறிவாளிகளையும் ஒன்று சேர்க்க பர்லின் சர்வ கலாசாலையிலுள்ள இந்திய மாணவர் உத்தேசித்து 50 இந்திய மாணவர் 100 ஆசிரியர்களையும் அவர்கள் மனைவிகளையும் விருந்திற் கழைப்பதென்று தீர்மானித்தனர். அவ்வாறே ஜனவரி மாதம் 17-ந் தேதி பிரிஸ்டல் ஹோட்டலில் விருந்து நடத்தப்பட்டது. அதற்கு விஜயம்செய்த ஆசிரியர்களில் முக்கிய மானவர் ஆசிரியர்கள் ஹேபர், தர்ம்ஸ் ஸோம்பார்ட், லூடர்ஸ், டெஸ்ஸார், மெயிர், மார்க்வால்ட், ரோஸன்ஹீம் முதலியவர்களாவர். பர்லின் சர்வ கலாசாலையில் இந்திய உருது உபந்நியாஸகரா யிருப்பவரும், ஜெர்மன் பாஷையை நன்கு கற்றவரும் இந்தியருமாகிய பண்டித தாரக சந்த ராய் இந்தியமாணவர் சார்பாக விருந்தினரை வரவேற்றார். டில்லி தேசீய சர்வ கலாசாலையைச் சேர்ந்த டாக்டர் ஸக்கீர் ஹுஸேன் செய்த உபந்நியாசம் மிக்க அழகாக இருந்தது. இரு கட்சிகளாகப் பிரிந்து சிநேகமாக இரண்டு வித அபிப்பிராயங்களின்மீது வாதம் நடந்தது.

ஆசிரியர் மாட்ஸ்கோஸ் முன்னேற்றத்திற்குத் தொழிலபி விருத்தி அத்தியாவசிய மென்றும் இஞ்சினீயரின் வேலை புதிய முறைகளைக் கண்டு பிடிப்பதா யிருந்தாலும் அவைகளைத் தனக்கு அனுகூலமாக உபயோகப்படுத்திக் கொண்டு சமூக விடுதலையை நாடுவதா அன்றி அவைகளுக்கு அடிமைப்பட்டுக் கிடப்பதா என்பதை மனிதனே நிச்சயிக்கவேண்டு மென்றும் இந்தியா பழைய புராதன முறைகளைப் புதுப்பித்து அனுபவத்திற்குக் கொண்டு வருவதால் முன்னேற முடியாதென்றும் தேசீய பலமும் விடுதலையும் அடைய வேண்டுமென்னும் தெள்ளிய நோக்கத்தோடு கைத்தொழில் அபிவிருத்தி யடைய இந்தியர் விடா முயற்சி செய்ய வேண்டுமென்றும் விபரமாக விளக்கிக் காட்டிப் பேசினார். கல்வி மந்திரி இலாகாவைச் சேர்ந்த டாக்டர் செம்மி இந்தியர் ஜெர்மன் பாஷையை மிகச் சுலபமாகக் கற்றுக்கொள்ளுவதைப் பாராட்

டிப் பேசினர். ஆசிரியர் தாரக சந்த ராய் தக்கவாறு பதிலளித்து விருந்தினர்களுக்கு வந்தனம் செலுத்தினர். ஜெர்மனியில் இந்தியர் கல்வியில் ஸ்திரமான ஸ்தாபனம் ஒன்று ஏற்பட இவ் விருந்து முக்கியமான சம்பவமாகும்.—"மாடர்ன் ரிவ்யூ"

இந்திய ஆயாக்கள்.

'மான்செஸ்டர் கார்டியன்' பத்திரிகையில் ஒரு நிருபர் பின்வருமாறு எழுதுகிருர்:—

பல வகை நிறங்கள் கொண்ட ஆடைகளுடன் ஒரு இந்திய ஆயா, ஆங்கிலப் பட்டணத்துக்கு வந்தால், அவளை ஆங்கிலேயர்கள் வெகு கவனமாக நோக்குவது சகஜமே. இங்கிலீஷ்காரர்களுக்கு வர்ணங்களிலும், விநோதங்களிலும் வெகு பிரியம். ஆயாளிடம் இவை யிரண்டும் விசேஷமாகக் காணப்படுகின்றன. ஆனல் அவளை மிருகத்தனமாய் விழித்துப் பார்க்கும் கடையர்களில் அவளது அருமை பெருமையுள்ள குணங்களை உணர்ந்தோர் வெகு சிலரே இருப்பர். ஆங்கிலோ இந்தியக் குடும்பங்களில் அவள் தாதியாக அமர்ந்து எவ்வளவு விசுவாசமாக நடந்து வருகிருளென்பதை வெகு சிலரே அறிவர். வெள்ளைச் சேடியர்களைக் காட்டிலும் இவ் வாயாக்கள் மிகவும் மேம்பட்டவர்கள். இவர்களிடத்தில் அன்பும் தாய் வாஞ்சையும் இயற்கையாகவே அமைந்துள. குழந்தைகளைப் போஷிப்பதிலும், விளையாட்டுக் காட்டுவதிலும், தாலாட்டித் தூங்க வைப்பதிலும் இந்திய ஆயாக்களைப் போன்றவர்கள் கிடையவே கிடையாது. அவளை மேனுட்டு நாகரீகம் அதிகம் பற்ருத படியினல் அவள் தன் கவனத்தை இதர துறைகளிற் செலுத்தாது, அனைத்தையும் குழந்தைகளைக் காப்பதிலேயே செலுத்த முடிகின்றது. அவள் படித்துக் காலங் கழிக்கவாவது, அல்லது ஆடவர்களுடன் தமாஷ் பண்ணவாவது முற்படுவதில்லை. இவ்விஷயங்களி லெல்லாம் இந்திய ஆயா, ஐரோப்பியச் சேடிக்கு நேர் விரோதம். இது மட்டுமோ? இந்திய ஆயாக்களிடம் செட்டும் சிக்கனமும் நாம் பழகவேண்டும். வெள்ளையர்களைப் போல வாரம் ஒன்றுக்கு 10, 15, ஷில்லிங் சம்பளம் வேண்டுமென்றும் அவர்கள் கேட்பதில்லை—"தேசபக்தன்"

விதவா விவாகம்.

சென்ற ஆகஸ்டு மாதம் 15-ந் தேதி யன்று டங்கயில் என்ற வடக்கிந்திய கிராமத்தில் டாக்டர் சசிமோகன் டிடாப்தார், ஸ்ரீமான் நளினிநாத் மித்ரா இவர்களின் பெருமுயற்சியால், இந்து சபையின் ஆதரவில் ஒரு விதவா விவாகம் நடை பெற்றது. இவ்வூரில் இது தான் 2-வது விதவா விவாகம். முதலாவது விவாகம் சுமார் 40-வருஷங்களுக்கு முன்னே நடந்தது. அப்போது ஸ்ரீநாத் சந்தா என்பவர் ஒரு விதவையைக் கல்யாணஞ் செய்து கொண்ட போது எல்லாரும் அவரை எதிர்த்து ஜாதிப் பிரஷ்டம் செய்ய முற்பட்டனர். ஆனால் இப்போது நடந்த விதவா விவாகத்தை எல்லோரும் ஆதரித்தனர். ஸ்ரீமதி சுபாஷிணி தேவி என்ற விதவை மணப் பெண்ணுக்கு அவள் முதற் கணவன் கல்யாணம் நடந்த 38-ம் நாளில் இறந்து போனான். இப்போது தான் அவளுக்குப் பதினான்கு வயது நடக்கின்றது. இவ்விதவா விவாகத்துக்குப் பிராமண புரோகிதர்களும் விஜயஞ் செய்திருந்தனர். இந்து சமஸ்கார விதிகளின்படி கலியாணம் வெகு சிறப்பாக நடந்ததாம். எல்லா ஜாதியையும் சேர்ந்தோர்கள் (3000 பேர்களுக் கதிகம்) இதைக் கண்ணுற்று மகிழ்ச்சி யெய்தினர்.—"தேசபக்தன்"

பொது விஷயங்கள்

உலகில் பெரிய மலர்

உலகிலேயே மிகப் பெரிய மலர் சுமத்ராத் தீவில் இருக்கிறதாம். இதை முதன்முதலாகப் பார்த்த ஐரோப்பியர் 1818-ம் ஆண்டில் அத்தீவில் சுற்றுப்பிரயாணம் செய்த டாக்டர் அர்னால்டு என்பவர். பெரிய மரங்களின்மீது சுற்றி வளரும் ஒரு வகைக்கொடியின் வேர்களிலிருந்து இது நேராக முளைத்து மலர்கிறதாம். இதற்கு

இலை கிடையாது. இந்தப் பூவின் குறுக்களவு ஒரு கஜம். கிண்ணம் போன்று உள்ள மத்தியப்பகுதி மட்டும் ஓர் அடி குறுக்களவுள்ளது. மற்றும் அதன் ஒவ்வொரு இதழும் ஓர் அடி குறுக்களவுள்ளதாம். இந்த இராட்சதப் பூவின் இதழ் மற்ற மலர்களின் இதழ் போன்றதன்று; சதைப் பற்றுள்ளது. நிரம்ப மெல்லிய இடத்தில் அதன் கனம் $\frac{1}{4}$ அங்குலம். பூவின் மத்தியிலுள்ள குழியில் $1\frac{1}{2}$ காலன் தண்ணீர் பிடிக்கும். அதன் நிறை 15 ராத்தல். நிறம் மஞ்சள். ஆனால் இடையிடையே சிகப்புப் புள்ளிகள் உண்டு. இதன் மொட்டுகள் முட்டைக் கோஸைப் போல் இருக்கும். மொட்டு விட்ட பின்னர் நன்கு மலர்வதற்கு ஒரு மாதம் செல்லும். பிறகு இரண்டு நாளைக்கெல்லாம் வாட ஆரம்பித்து விடும்.

வார்த்தைகளை நிறுக்கும் யந்திரம்

வெஸ்ட் மின்ஸ்டரில் சமீபத்தில் திறந்து வைக்கப்பட்ட நிறை, அளவு கருவிகளின் கண் காட்சியில் வார்த்தைகளை நிறுக்கும் யந்திரம் ஒன்றும் வைக்கப்பட்டிருக்கிறதாம்! முதலிலே ஒரு வெறுங் காகிதத்தை இதில் நிறுத்து எடுத்துக்கொண்டு, பிறகு அந்தக் காகிதத்தில் பென்ஸிலால் எழுதி விட்டு மீண்டுமொரு முறை நிறுத்தால், நிறை கொஞ்சம் அதிகமாயிருப்பதாக, மேற்படி யந்திரத்தின் முள் தெரிவிக்குமாம். ஆனால் முள் காட்டும் இந்த வேற்றுமையை அணுதரிசினிக் கண்ணாடியின் துணை கொண்டே பார்க்க முடியும். ஒரு வார்த்தையின் நிறை மிக நுட்பமான அளவினதாகவே இருக்குமென்று சொல்ல வேண்டுவதில்லை. ஒரு அவுன்சு நிறையில் கோடிக்கணக்கான வார்த்தைகள் நிற்கும். ஒரு மயிரின் நிறைக்கு இணையாவதற்கு ஆயிரக் கணக்கான வார்த்தைகள் வேண்டும். மேற்படி யந்திரம் விஞ்ஞான ஆராய்ச்சி சம்பந்தமான மிக நுட்பமான வேலைகளுக்குத் தான் இப்போது உபயோகிக்கப் படுகிறதாம். உலகிலேயே இவ்வளவு நுண்ணிய நிறுக்கும் கருவி இல்லையாம். மேற்படி கண்காட்சிச் சாலையில் வைக்கப்பட்டிருக்கும் மற்றொரு நிறுக்கும் யந்திரம் கடைகளில் உபயோகப்படுத்தக் கூடியது. இதில் மனிதர்களுடைய மயிரிலிருந்து 40 ராத்தல் வரையுள்ள பொருள்கள் எல்லாம் நிறுக்கலாம். அக்காட்சிச் சாலைக்கு நிறுக்கும் யந்திரங்களை அனுப்பியிருக்கும் ஒரு கம்பெனியார் மின்சார சாதனத்தினால் 30 லட்சம் முறை பரி

சோதித்த பின்னரே யந்திரங்களை விற்பனைக்கு அனுப்புகிறார்களாம்!

ஒரு வார்த்தைக்கு 6000 ரூபா!

சமீபத்தில் காப்டன் அமண்டஸன் என்பார் ஆகாயக் கப்பலில் பறந்து சென்று வடதுருவத்தைக் கண்டு திரும்பிய விவரம் நேயர்களுக்குத் தெரியும். அவர் வடதுருவத்தை அடைந்த நேரம் மேமீ 12உ இரவு ஒரு மணியாம். அப்போது அவருடைய ஆகாயக் கப்பலிலிருந்து ரேடியோ மூலம் "நியூயார்க் டைம்ஸ்" என்னும் பத்திரிகைக்கு அனுப்பிய செய்திதான் உலகில் சமாசாரப் பத்திரிகைகளின் சரித்திரத்திலேயே மிக விலை உயர்ந்த செய்தியாம். மொத்தம் அச்செய்தி 100 வார்த்தைகள் அடங்கியது. மேற்படி பத்திரிகையின் அன்றைய இரவுப் பதிப்பு எல்லாம் தயாராகி முதற்பக்கம் அச்சடிக்கப்போகும் தருணத்தில் "வடதுருவம்" என்று ஆரம்பித்து அச்செய்திவர ஆரம்பித்ததாம். உடனே முதற் பக்கத்துக்கு முதலில் தயாரித்திருந்த விஷயங்களை எடுத்துப் போட்டு விட்டு இச் செய்தியைப் பிரசுரித்தார்களாம். மேற்படி வடதுருவப் பிரயாணத்தின் விவரத்தைப் பிரசுரிக்கும் உரிமை பெறும் பொருட்டு "நியூயார்க் டைம்ஸு"ம் ஸெயிண்ட் லூயி நகரைச் சேர்ந்த இரண்டு பத்திரிகைகளும் மொத்தம் 2-லட்சம் டாலர்கள் மேற்படி பிரயாணச் செலவுக்குக் கொடுத்தனவாம். எனவே வடதுருவத்தி லிருந்து வந்த செய்தியில் ஒவ்வொரு வார்த்தையும் 2000 டாலர் அதாவது ஏறக்குறைய 6000 ரூபா பெறுமான முள்ளதாகிறது! இவ்வாறு ஒரு பத்திரிகை செலவு செய்ய வேண்டுமானால் அதை வாங்கிப் படிப்போர் எத்தனை பேர் இருக்க வேண்டும்! இதினின்றும் அமெரிக்காவில் பத்திரிகைகளின் நிலையை ஒருவாறு நேயர்கள் ஊகித் தறியலாம்.

"லக்ஷ்மி" பஞ்சாங்கம்

அக்ஷய௵ புரட்டாசி–ஐப்பசி௴, சாலிவாகன 1849,
கலியுகாதி 5028, பசலி 1336, கொல்லம் 1102, ஹிஜரா 1345,
இங்கிலீஷ் 1926௵ அக்டோபர்௴

அக்டோபர்	புரட்டாசி ஐப்பசி	வாரம்	திதி	நக்ஷத்திரம்	யோகம்	விசேஷங்கள்
1	15	வெ	தச 24-5	பூச 33-38	மர 60	மரண யோகம்
2	16	சனி	ஏகா 50-15	ஆயி 41-5	மர 41 அ	கரிநாள்
3	17	ஞா	து 39-10	மக 48-48	மர 48 சி	காரியம் மத்திபம்
4	18	திங்	திர 43-3	பூர 56-18	சித் 60	பிரதோஷம்
5	19	செ	சது 48-53	உத் 60	அமி 60	மாச சிவராத்திரி
6	20	புத	● 54-13	உத் 3-20	மர 3 அ	சர்வ பிதுரு மாளய அமாவாசை விரதம்
7	21	வி	பிர 58-43	அஸ் 9-45	சித் 60	நவராத்திரி பூஜா ஆரம்பம்
8	22	வெ	துதி 60	சித் 15-30	சித் 60	சந்திர தரிசினம்
9	23	சனி	துதி 2-23	சுவா 20.23	அமி 20 சி	தானியம் செலவிடல், ஆபரணம் பூணல்
10	24	ஞா	திரி 5-18	விசா 24.30	மர 60	மாச சதுர்த்தி விரதம்,
11	25	திங்	சது 7-15	அனு 27.35	சித் 60	உபவாச நாள்
12	26	செ	பஞ் 8-10	கே 29-38	மர 29 அ	சஷ்டி. உபவாஸ தினம்,
13	27	புத	சஷ் 7-40	மூல 30-25	மர 30 அ	லக்ஷ்மி பூஜை, சுபம்
14	28	வி	சப் 5-55	பூரா 29-48	சித் 60	நான்குகால் ஜீவன் வாங்கல்
15	29	வெ	அஷ் 2-50	உத் 27-48	சித் 27 மர	சரஸ்வதி பூஜை, மகாநவமி
16	30	சனி	தச 52-20	திரு 24-25	சித் 60	விஜய தசமி
17	ஐப்பசி 1	ஞா	ஏகா 45-18	அவி 19-40	மர 19 சி	புண்ணியகாலம், ஏகாதசி
18	2	திங்	து 37-22	சத 13-58	சித் 13 மர	பத்மநாப துவாதசி
19	3	செ	திர 28-50	பூரட் 7-38	மர 7 அ	ஏற்றம் போட
20	4	புத	ச ○ 20-8	உத் 0-50 ரே 54-10	சித் 0 மர	பௌர்ணமி, லக்ஷ்மி விர[தம்
21	5	வி	○ 11-43	அஸ் 48-10	அமி 48 சித்	தனலக்ஷ்மி விரதம்
22	6	வெ	பிர 4-18	பர 43-13	சித் 60	கரிநாள்
23	7	சனி	திரி 55-35	கி * 39-48	அமி 60	கிருத்திகை, சந்திரோதய [விரதம்
24	8	ஞா	சது 50-10	ரோ 38-5	சித் 60	நாலுகால் ஜீவன் வாங்க
25	9	திங்	பஞ் 49-25	மிரு 38-30	அமி 38 சி	சுபகாரியங்கள் செய்ய
26	10	செ	சஷ் 50-35	திரு 40-55	மர 40 சி	மரணயோகம்
27	11	புத	சப் 53-48	புன 45-20	சித் 60	சீமந்தம், வித்தியாரம்பம்
28	12	வி	அ 58-38	பூச 51-20	அமி 51 சி	அஷ்டமி
29	13	வெ	நவ 60	ஆயி 58-20	மர 60	மத்திபம்
30	14	சனி	நவ 4-30	மக 60	அமி 60	மத்திபம்
31	15	ஞா	தச 10-53	மக 5-45 பூர	மர 5 சி	மத்திபம்

ஆங்கில ஆசான்

அல்லது ஆங்கில போதினி

தமிழ் எழுத்துக்களை வாசித்தால் இங்கிலீஷ் பதங்கள் சுலபமாய் தெரிந்து கொள்ளலாம்.

இது 8-ம் பதிப்பு 800-பக்கம் கொண்ட ஓர் பெரிய புத்தகம்.

உபாத்தியாயர் இல்லாமல் சுலபமாய் இங்கிலீஷ் கற்றுக்கொள்ள உதவும் புத்தகம் இதுதான். இது மாதர்களுக்கும், வியாபாரிகளுக்கும், தொழிலாளர்களுக்கும், மிகவும் முக்கியமானது.

முழு காலிகோ பயிண்டு புத்தகம் 1-க்கு விலை ரூ. **2.** தபால் சேலவு அணா **6.**

பினாங்கு, சிங்கப்பூர் தேசங்களிலிருந்து முன் பணம் அனுப்பினால் புஸ்தகம் ரிஜிஸ்டர் செய்து அனுப்பப்படும்.

தி. இராஜகோபால் முதலியார்,
நெ. 302, தங்கசாலைத் தெரு, மதராஸ்

புது மாடல் அமெரிக்கன் கைக் கெடியாரம்

அழகான ரோல்டு கோல்டு கைச் சங்கிலி இனாம் தரப்படும்.



வெகு அழகிய சிறு ஸைஸ்

5 வருஷம் உத்தரவாதம்

திருப்தி இல்லாவிடில் பணம் வாபீஸ்.

இக்கடியாரத்தைத் தான் அமெரிக்காவிலுள்ள பெருத்த தனிகர்கள் தற்சமயம் கையில் அணிந்து கொள்ளுகிறார்கள். எல்லோரும் பிரியப்படும்படியான நியூ மாடல் இதுவே. பான்ஸி டயல் உள்ளதாயும், வேலைப்பாடு மிக உறுதியா யுள்ளதாயும், ஸைஸ் வெகு சிறியதாயும் உள்ளது. வி. பி. சட்ட மில்லாத வெளி நாட்டு நேயர்கள் தபாற் செலவுக்காக ரூ. 1-8-0 யும் சேர்த்து முன் பணம் அனுப்ப வேண்டும். கையில் கட்டும் அமெரிக்கன் ரோல்டு கோல்டு சங்கிலியுடன் விலை ரூ. 7 0 0

தி. பான்ஸி வாட்சு அவுஸ்,
15. A. பீட், அண்ணா பிள்ளை தெரு,
மதராஸ்.

கையில் கட்டும் அமெரிக்கன் ரோல்டு கோல்டு சங்கிலி

இனும். (திருப்தி இல்லாவிடில் பணம் வாபீஸ்) சிறுசைஸ்.



18 காரட் ரோல்டு கோல்டு தங்கக் கலர் டைல் அமைத்த ஸ்விஸ் மேட் ரிஸ்லெட் கெடியாரம் பார்வைக்கு அசல் பொன் கெடியாரம் போல் தோன்றும். உறுதியான சாமான்களால் செய்யப்பட்டது. சரியான மணி காட்டும். எம் மாதிரி ஷேப்பானபோதிலும், சப்ளை செய்யப்படும்.

(நெ. 97) 18 காரட் 5 வருடம் உத்திரவாதமுள்ள
ரீஸ்டு கைக்கெடியாரமும், மேல்படி இனும் சங்கிலியுடன்

ரூபாய் **6—8—0**தான்.

Apply :— THE ENGLISH EMPIRE WATCH & Co.
Post Box No. 1233, MADRAS.

நீங்கள் திரிகாலங்களையும் அறிய விரும்பினால்
வாயுவேக மனோவசிய சாஸ்திரம் ரூ. 1—8—0

இன்ப வாழ்க்கையை விரும்பினால்
சதிபதிகளின் மர்மம் 1—0—0

மோசக்காரர்களிடம் சிக்காமல் வாழ வேண்டுமானால்
மதிமோசக் களஞ்சியம் 1—0—0

ஓயாமல் சிரித்துக்கொண்டிருக்க வேண்டுமானால்
திடீர் புளுகன் அணா **6.** ஆகாய புளுகன் அணா **6.**

முக்த மாலா அல்லது பிரபஞ்ச விநோதம் ரூ. **2.**

இவைகளுக்கு இன்றே ஆர்டர் செய்யுங்கள்.

ஷண்முகானந்தம் புத்தக சாலை,
பார்க் டவுன், மதராஸ்.

22 காரட்டு ரோல்டு கோல்டு 5 வருஷம் உத்திரவாதம்.

திருப்தி இல்லாவிடில் பணம் வாபீஸ்



முன் விலை ரூ. 10—0—0.

குறைந்த விலை ரூ. 6—8—0.

இதில் எந்த ஷேப் வேண்டுமானாலும் ரூபா 6-8-0 தான் தபாற் செலவு இனாம்.

F. M. S. ஆடர்கள் ரூபா 8 முன்பணம் அனுப்பவேண்டும்.

யூனியன் அண்டு கம்பேனி,

33, தையப்ப முதலி தெரு, ஜி. டி. மதராஸ்.

பார்த்தவுடன் சந்தோஷத்தையும், கேட்டவுடன் ஆநந்தத்தையும், வாசித்தவுடன் மனோ உற்சாகத்தையும், முடித்தவுடன் வியப்பையும் கொடுக்கும் நாவல்கள் எவை?

அன்னவாசலின் அதிசயக் கொலை	விலை ரூ.	1-4-0
நந்தவனத்தில் நடந்த இரகசியக் கொலை	ரூ.	1-0-0
தலைவாங்கி அபூர்வ சிந்தாமணி	விலை ரூ.	1-0-0
ஸ்திரீ புருஷ ரகசியம் விலை	ரூ.	1-8-0

தபாற் செலவு வேறு.

பிர்மா அண்டு கம்பேனி,

203, தங்கசாலைத் தெரு, மதராஸ்.

இப்பூவுலக மெங்கனும் புகழ்பெற் றோங்கிய
நமது பி. ஸி. பழனி அண்டு கம்பெனியாரின்
ஸ்பெஷல் பட்டணம் பொடியையும்,
பி. ஸி. பரிமள நஸ்யத்தையும்
ஓர் முறை உபயோகியுங்கள்.

பி. ஸி. பழனி அண்டு கம்பெனியார்,

தபாற் பெட்டி நெ. 230, G. T. மதராஸ்.

பொன், வெள்ளி மெடல்கள் பரிசுடன் புகழப்படும்
ரிஜிஸ்டர்டு & மெடிகேடெட்

கே. எஸ். சுகந்த மூக்குத் தூள்.

உபயோகிக்கத் தவற வேண்டாம்

ஒற்றைத் தலைநோய், பீனிசம், மண்டைக் குத்தல், ஜலதோஷம், இன்னும் கண்டத்திற்கு மேல் பட்ட அநேக ஜன்ம வியாதிகளை சொஸ்தப்படுத்தும்.

புட்டி 1-க்கு	ரூ.	**0—4—0**
டஜன் 1-க்கு		**2—4—0**
சேர் 1-க்கு		**1—8—0**

(V. P. சார்ஜ் வேறு)

K. S. சாகிபுவின் அசல் பட்டணம் பொடி.

வீசை 1-க்கு ரூ. **3—0—0**
(டின் & V. P. சார்ஜ் வேறு)

சொந்தக்காரர்

K. சுல்தான் முஹையதீன் சாயபு

தபாற்பெட்டி 260, நெ. 8 அப்பு மேஸ்திரி வீதி, சென்னை.

உலகப்பிரசித்தி பெற்ற ஸ்ரீ கோக்கோக மஹாமுனிவர்
அருளிச்செய்த அசல்

சிந்தாமணி லேஹியம்

அயக்காந்த செந்தூரம்

சாப்பிடுங்கள். பத்தியமில்லை. சகல வியாதிகளுக்கும் தாதுவிர்த்திக்கும் கைகண்ட ஔஷதம். கண்ணுக்கு நாகப்பழம் போன்றும் வாய்க்கு அமிர்தம் போன்றும் இருக்கும்.

48-நாள் சாப்பிட ஒரு செட்டு விலை ரூ. 5—0—0
தபாற் செலவு ரூ 0—8—0

உபயோகிக்கும் விதம் லேஹியத்துடன் வரும்.
எல்லாவிடங்களிலும் ஏஜண்டுகள் தேவை.

ஸ்ரீ தனம் அண்டு கம்பெனி,
பிரும்மஸமாஜம், ஜி. டி சென்னை.

எப்பேர்ப்பட்ட மேக வியாதியும் தொலைந்தது !

சகல மேக ராஜாங்க

பைராகி எண்ணெய்

7 நாள் புட்டி ரூ. 3. 14 நாள் புட்டி ரூ. 5.

உபயோகிக்கும் விதம் பார்சலுடன் வரும்

ஸ்ரீ தனம் அண்டு கம்பெனி.

பிரும்ம ஸமாஜம், ஜி. டி. மதராஸ்.

இனாம் ! இனாம் !!

தபால் சார்ஜூம் வசந்த சமுத்ரம் நாவலும் இனாமாக அனுப்புவோம். திருப்தி இல்லாவிடில் பணம் வாபீஸ் செய்யப்படும்.



ரூபா 14-0-0 மதிப்பிடக் கூடியதும் ரோல்டு கோல்டு கோல்டன் டையில் கைக் கெடியாரம். 5-வருஷம் உத்தரவாத முள்ளது. இக் கடியாரங்களில் எம்மாதிரி ஷேப் வேண்டுமானாலும் அனுப்புவோம். இன்றே எழுதுங்கள்! நூற்றுக் கணக்காக ஜனங்கள் வாங்கி சந்தோஷம் அடைந்தனர். மேற்கண்ட தபால் சார்ஜ் இனாம் உடன்

விலை ரூபா **6—8—0.**

இந்து-பிரிட்டிஷ் வாட்சு கம்பெனி,

பீட் நெ. 3, பார்க் டவுண் (P. O.) மதறாஸ்.

24 தங்க மெடல்கள் பரிசு பெற்ற

பட்டணம் பொடி.

காரம், மணம், குணம், நிறம், வாடை கமழுகிறது.

N. V. ஷண்முகம் & கோ.,

போஸ்ட் பாக்ஸ் 555,

வண்ணாரப்பேட்டை போஸ்டு, மதராஸ்.

2-ம் பதிப்பு! 2-ம் பதிப்பு!!

ஆனந்த ஆங்கில பாஷா போதினி

என்னும் நூலை உடனே வரவழைத்துப் படியுங்கள்.

இது 700—பக்கமுள்ள அழகிய முழுகாலிகோ பைண்டுள்ளது

விலை ரூபாய் 1.

ஆனந்தபோதினிச் சந்தாதாரர்களுக்கு **0—12—0**

இது இங்கிலீஷ் பாஷையை எவர்க்கும் எளிதில் போதிக்கும் அரிய நூல். இதுவரை வெளிவராத நூதன பாடமுறைகளுடன் வெளியிடப்பட்டிருக்கிறது. இதனைப் படிப்பவர் எந்த ஆசிரியருடைய உதவியுமின்றிச் சில தினங்களில் ஆங்கில பாஷையில் தேர்ச்சியடைந்து நன்ருகப் பேசவும், படிக்கவும், எழுதவும் தெரிந்துகொள்ளலாம். கிராம முனிசீப்களுக்கும், மணியக்காரர், கர்ணம் முதலிய கிராம உத்தியோகஸ்தர்களுக்கும், பட்லர்க்கும், சிலோன், பிஞங், சிங்கப்பூர் முதலிய இடங்களிலுள்ள தோட்டங்களின் கங்காணிமார்களுக்கும், இங்கிலீஷ் தெரிந்துகொள்ள விரும்பும் மற்ற எல்லோருக்கும் இது மிக்க அவசியமான புத்தகம்.

குறிப்பு :—எங்கள் ஆனந்தபோதினி ஆண்டு விழாவுக்காக மேற்படி புஸ்தகம் பாதி விலைக்குக் கொடுக்கப்படுகிறது.

ஆனந்தபோதினி.

ஓர் உயர்தர அழகிய மாதாந்த தமிழ்ப்பத்திரிகை; 20,000 சந்தாதாரர்களை யுடையது; தமிழ்நாடெங்கும் பிரசித்தியுற்று முதன்மை பெற்றது; 12 ஆண்டுகட்டு முன் தோன்றியது; குறைந்த சந்தாத் தொகையுள்ளது; விவேகத்தை விருத்திசெய்வது, பாஷாபிவிருத்தி, தேசாபிவிருத்தி, ஞானாபிவிருத்தி முதலிய அரிய நீதிகளை போதிக்கவல்லது; தமிழ்நாட்டு ஆடவர், பெண்டிர், சிறுவர், சிறுமியர், விருத்தர் குமாரர் முதலிய எல்லோரும் [illegible]யுடன் வாசிக்கத்தக்கது. மாதிரி காபி இனம்.

வருஷ சந்தா தபால்கூலி உள்பட	இந்தியா, பர்மா, சிலோன்,	ரூ. 1-0-0
	வெளி நாடுகள்	ரூ. 1-4-0

ஆனந்தபோதினி ஆபீஸ், தபால்பெட்டி நெ. 167, மதராஸ்.

கேஸரியின்

லோத்ரா.

கர்ப்பாசய ரோக நிவாரிணி

இதன் உபயோகத்தால் குணம் கைக்கொண்ட பெண்மணிகள், இதை ஸ்திரீகளுக்கோர் வரப் பிரசாதினி என்றும் அதி சிரேஷ்டமான அவுஷத மென்றும், விலையில்லா ஆபரண மென்றும் சொல்லுகிறார்கள். ருதுசூலை, அகாலபஹிஷ்டி, ருது சிராவம் ஜாஸ்தி அல்லது குறைச்சலாய்ப் போவது, பஹிஷ்டை தடைபட்டுப் போவது, வெண் ரத்தப் போக்கு, கர்ப்பஸ்ராவம், அகாலப் பிரசவம், கருப்பை நழுகி விடுதல், கர்ப்பவிரணம், ருதுசூலையினால் வயிற்றில் உண்டாகும் கட்டி, மூர்ச்சை, சரீரம் பருத்தோ அல்லது மெலிந்தோ போவது, கணச்சூடு, சந்தான மில்லாமை, மலபத்தகம், இருமல், உப்பஸம், மேஹ ஜ்வரம் முதலிய சமஸ்த ரோகங்களும் இந்த லோத்ராவி னுபயோகத்தால் வெகு நம்பகமாய் நிவர்த்திக்கப் படும். இதன் விலை பெரிய புட்டி (12 அவுன்ஸ்) ரூ. 3–0–0
சிறிய புட்டி (6 அவுன்ஸ்) ரூ. 1–10–0

கேஸரி குடீரம், ஆயுர்வேத ஔஷதசாலை,
எழும்பூர், மதராஸ்.

A. S.

எ. எஸ். சுகந்த மூக்குத்தூள்.

ஒரு சிட்டிகை எடுத்து காலணு மூக்குத்தூளுடன் கலந்தால் அதிக இன்பமான சுகந்த வாசனையைத் தரும். கண்டத்துக்கு மேற்பட்ட 96 வியாதிகளைக் கண்டிக்கும். இந்தத் தூள் எக்காலமும் கெடாது. எந்தக் கம்பெனிகளிலாவது வாங்குபவர்கள் எ. எஸ். மார்க்கைக் கவனித்து வாங்கவும்.

எ. எஸ். சுகந்த மூக்குத்தூள் புட்டி 1-க்கு அணு 4 ஷெ டஜன் 1-க்கு ரூ. 2-4 ஷெ சேர் 1-க்கு ரூ. 3.

எணம ழ. பரிமள மூக்குத்தூள் புட்டி 1-க்கு அணு 3 ஷெ ட... ந ரூ. 2 ஷெ சேர் 1-க்கு ரூ. 1-8.

போன் வெள்ளி மெடல்கள் பெற்ற

எ. எஸ். முகம்மத் சம்சுத்தீன் சாயபு,

106, சவுக்கார் பேட்டை, தபால் பெட்டி நெ. 1201, மதராஸ்

தீபாவளி! தீபாவளி!!



பணத்தைப் போட்டாலும், பட்டுக்கே போடுங்கள்!!

எப்பொழுதும்

நீங்கள் நூல் புடவைகளை வாங்குவதால் என்ன பயன்?

வருஷத்துக்கு ஒரு முறையாவது ஓர் பட்டுப் புடவை வாங்க வேண்டாமா?

இவ்வருஷத் தீபாவளிப் பண்டிகைக்கு, ஓர் கிளாவர்க் கரைப் பட்டுப் புடவைக்கு ஆர்டர் செய்யுங்கள்.

தீபாவளிக்கென்று புது மாதிரியான அநேக கலர்களில் தயார் செய்து ஸ்டாக் செய்திருக்கிறோம்.

No. 1.	16 மு×44"	புடவை	38/-
	18 மு×44"	,,	44/-
No. 2.	16 மு×44"	புடவை	30/-
	18 மு×44"	,,	36/-

CATALOGUE FREE

கே. எஸ். முத்தையா கம்பனி

பட்டு வியாபாரிகள்

சில்க் ஹவுஸ் - - ஸ்ரீ காசி.

N. S. S.

தீபாவளி! தீபாவளி!!

தமிழ் நாட்டவர்களுக்கு முக்கிய நாளும்
வருஷத்திற்கு ஒரு நாளுமான

தீபாவளி பண்டிகை

வரப்போகிறது.

தீபாவளிப் பண்டிகைக்கு வேண்டும் காசி, காஞ்சி, மாயவரம், சேலம் முதலிய ஊர், பட்டு நூல் தினுசுகளுக்கு இன்றே ஆர்டர் செய்யுங்கள்.

எமது "ஸ்பெஷல்" கேட்லாக் இனமாய்
அனுப்பப்படும். இன்றே எழுதுங்கள்.

இவ் வருஷம் பட்டு நூல் ஜவுளிகளின் விலைகள் மிகவும் மலிந்திருப்பதால், கடந்த வருடங்களைப் போல, அதிக விலை கொடுத்து வாங்க வேண்டியதில்லை.

இன்றே தங்களுக்கு வேண்டும் தினுசுகளுக்கு
ஆர்டர் செய்யுங்கள்.

K. S. MUTHIAH & CO.,

EXPORT DEPARTMENT

POST BOX 99, MADRAS.

Show room : 287, Esplanade. Phone : No. 2693.

N. S. S.

Printed by P. R. Rama Iyar & Co., Madras and Published by K. S. Sundarar.